

பச்சை வனப் பாவை!
மாடஸ்டி & கார்வின் முழு நீள சாகஸம்
லயன் காமிக்ஸ்
ARC
ரூ.5/-


விரைவில் வருகிறது!
லக்கி லூக் தோன்றும்
பூம் - பூம் - படலம்!
லயன் காமெடி ஸ்பெஷல்-II
லயன் காமிக்ஸ்
முழு வண்ணத்தில்
முழு நீள கார்ட்டூன்


விரைவில் வருகிறது!
லயன் காமிக்ஸ்
“கம்ப்யூட்டர் கொலைகள்!”
ரிப் கிர்பி சாகஸம்!
ரூ. 3.50

# ஹாட்-லைன்!

வாச்க நண்பர்களே,

அக்டோபர் முதல் வாரத்தில் நமது காமிக்ஸ் பதிப்பாளர்களை சந்திப்பதற்காக ஐரோப்பா செல்லவிருந்தேன்.... ஆனால் பிளேக் பீதி நம்நாட்டை விட அயல்நாட்டவர்களை பெரிதும் கலவரப்படுத்தியிருந்த காரணத்தால் பயண ஏற்பாடுகளை ஒத்திப்போட வேண்டிய சூழ்நிலை!

செப்டம்பரின் பெரும்பகுதியினை பயண வேலைகளில் செலவிட்டு விட்ட காரணத்தால் இவ்வருடம் தீபாவளி மலர் வெளியிட இயலாமல் போய்விட்டது! Sorry! இதற்கு ஈடுகட்டும் விதத்தில் வரும் கோடை மலரை ரூ. 25/- விலையில் வெளியிட்டு உங்களை அசத்தத் தயாராகி விட்டேன்...! விபரங்கள் ஜனவரி இதழ் முதல் !

சென்ற மாத வெளியீடான "மரண மண்டலம்" ஒரு சூப்பர் ஹிட்டாகி விட்டதை உங்கள் விமர்சனக் கடிதங்கள் தெளிவாக்கி விட்டன..! உண்மையைச் சொல்லப் போனால் அந்த இதழை வெளியிடும் முன்பு எனக்கே கூட கொஞ்சம் கலக்கம்! (வாசகர்களின் Top Heroes லிஸ்டில் மின்னல் படையினர் ஒன்பதாவது இடத்தில் இருந்ததை நினைத்துத்தான்). ஆனால் அருமையானதொரு ஹாலிவுட் திரைப்படத்தைப் போல தெளிவான கதையம்சம் இருந்ததால் "மரண மண்டலம்" இந்த ஆண்டின் 'ஹிட்' கதைகளில் ஒன்றாகி விட்டது!

இம்மாதம் மாடஸ்டி & கார்வின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற ராபின் ஹூட் ராஜ்யத்திற்குச் சென்று சாகஸம் நிகழ்த்துகிறார்கள்! செத்துப் போன ஒரு சகாவின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதற்காக தங்கள் உயிரையே பணயம் வைக்கத் தயாராகும் நம் சாகஸ ஜோடியின் யதார்த்தமான இந்தக் கதையை நீங்கள் கட்டாயம் விரும்புவீர்களென்று நினைக்கிறேன்!

'போஸ்டர் போட்டிக்கு' ஏராளமான செலக்ஷன்கள் வந்து குவிகின்றன! ஏகோபித்த தேர்வு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் - ஆளுக்கு ஒரு தினுசான ரசனையில் அட்டைப்பட டிசைன்களை தேர்ந்தெடுத்துள்ளனர்! ஆகவே போட்டிக்கு இன்னும் ஒரு மாத அவகாசம் நீட்டிக்கிறேன்...! அடுத்த இதழில் ப்ளோ-அப்பாக மிளிரப் போகும் படங்களின் விபரத்தைப் பற்றி எழுதுகிறேன்! ஓ.கே. யா?

அடுத்த மாதம் கேப்டன் பிரின்ஸ் குழுவினரின் சாகஸம் (பிரின்ஸ் in ஆப்பிரிக்கா) ரூ. 4/- விலையில் தெளிவான சித்திரங்களோடு வர விருக்கிறது!

ஜனவரி மாதம் புத்தாண்டு மலராக இரத்தப் படலம் - பாகம் V வருகிறது! பொங்கல் ஸ்பெஷலாக ஜனவரியிலேயே லக்கி லூக்கின் "பூம் - பூம் படலம்" முழு வண்ணத்தில் வருகிறது! (சமீபத்தில் வந்த "ஜெஸ்ஸி ஜேம்ஸின்" அதிரடி வெற்றியைத் தொடர்ந்து வரும் காமெடி ஸ்பெஷல் - II இது!)

அப்புறம் இன்னொரு குட் நியூஸ்! காமெடி கௌ-பாய் லக்கி லூக் ஒரு பக்கமிருக்க நமது Top Hero வான சூப்பர் கௌ-பாய் டெக்ஸ் வில்லர் இனி அடிக்கடி லயனில் சாகஸம் செய்திடுவார்! அதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன...

வாசக - விற்பனையாள நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்! மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்!

அன்புடன்,

ஆசிரியர்


## ஆண்டுச் சந்தா

ஓராண்டுச் சந்தா - ரூ. 50/-

(அரையாண்டுச் சந்தா கிடையாது.

சந்தாவில் ஸ்பெஷல் வெளியீடுகள் இடம்பெறாது)

M. O. அனுப்ப வேண்டிய முகவரி :

பிரகாஷ் பப்ளிஷர்ஸ், த.பெ. எண் : 374, சிவகாசி.


மாடஸ்டி தோன்றும்
பச்சை வனப் பாவை!
மாடஸ்டியின் மாளிகையில் ஒருநாள் காலை-
குட் மார்னிங், மிஸ்டர் கார்வின் - வெனிஸ் பயணம் எப்படி இருந்தது?
எங்கு பார்த்தாலும் தண்ணீர்தான் வெங்!
முதலாளியம்மா உள்ளே இருக்கிறாளா? இந்த வாரக் கடைசியில் என்னைப் பார்க்க வருவதாகச் சொல்லி இருந்தாள்! அழைத்துச் செல்லலாம் என்று வந்தேன்!
மிஸ். மாடஸ்டி ஜெயிலில் இருக்கிறார்கள் சார்!
ஜெயிலில் இருக்கிறாளா?
யெஸ், மிஸ்டர் கார்வின்! ஆனால் பழையதொரு நண்பரைச் சந்திக்கவே போயிருக்கிறார்கள்!
ஒரு நிமிஷத்திற்குள் என்னை வேறுவிதமாக நினைக்க வைத்துவிட்டாய் வெங்! அவள் யாரைச் சந்திக்கப் போயிருக்கிறாள்?
மிஸ்டர் பென் டர்னரை!


இதற்கிடையில் சிறைச்சாலையில்...
நீங்கள் இங்கு வந்தது, உங்களது நல்ல மனசைக் காட்டுகிறது மேடம். உங்களை இங்கு வரும்படி அழைக்க எனக்கு உரிமை இல்லை!
உண்மைதான் பென்... ஆனால் நான்தான் வந்து விட்டேனே...!
எனக்கு உங்களுடைய உதவி தேவைப்படுகிறது!
உனக்கு நான் உதவி செய்யாமல் இல்லையே பென்! என்னிடம் பணிபுரிந்த அத்தனை பேரையும் நல்லமுறையில் செட்டிலாக்கிய பின்னரே "தொழிலை" இழுத்து மூடினேன்! நீ செய்த தவறுகள்- இப்போது இந்த நிலைக்கு உன்னைக்கொண்டு வந்து விட்டன!
வங்கிக் கொள்ளையில் உன்னை ஈடுபட வற்புறுத்திய சிலரின் வலையில் விழுந்து விட்டாய். விளைவு – ஜெயில் வாசம்!
அப்போது நான் முட்டாளாக செயல் பட்டுவிட்டேன் என்பது எனக்கும் தெரியும் மேடம்!
அதேநேரம் ஸ்காட்லாந்து யார்டு அலுவல-கத்தில் இன்ஸ்பெக்டர் புருக்...
இப்போது அவள் பென் டர்னருடன் பேசிக் கொண்டிருகிறாளா? சுவாரஸ்யமான சங்கதியாக இருக்கே...
என்னுடைய மகள் சென்ற மாதம் இறந்து விட்டாள்... அதுவும் போதை மருந்துக்கு ஆளானதால்... அப்போது அவளது வயது 24தான்!
அட கஷ்ட காலமே - அதுபற்றி எனக்குத் தெரியாது! எனது ஆழ்ந்த அனுதாபங்கள் பென்! நான் ஏதாவது செய்ய வேண்டுமா?


உங்களுக்கு எப்போதுமே போதை மருந்து கடத்துபவர்களைக் கண்டால் பிடிக்காது- நிறையப் பேரை உள்ளே தள்ளி இருக்கிறீர்கள்!
பழசையெல்லாம் மறந்துவிடு பென்! நான் இப்போது ரிட்டையராகி விட்டேன்! இப்போது உனக்காக போதை மருந்து ஆசாமிகளுடன் நான் மோதப் போவதில்லை!
நோ, நோ.... என்னுடைய மனதில் வேறு ஒன்று உள்ளது மேடம்...
கம்பி வலைகளுக்கிடையே எரிந்துபோன தீக்குச்சி ஒன்று வெளியே வந்தது-
அதே சமயம் இன்ஸ்பெக்டர் புரூக்கின் அலுவலகத்தில்...
மாடஸ்டியும் ஒரு காலத்தில் சட்டத்தின் மறுபக்கம் இருந்தவள் இல்லையா சார்?
யெஸ்! ஆனால் எந்த விவகாரத்திலும் மாடஸ்டி கறைபடியாதவள்!
நீங்களும் அவளுடைய நண்பர் எனக் கேள்விப் பட்டேன், சார்!
அவள் மிகவும் வசீகரமான பெண் சார் ஜென்ட்! அது மட்டுமல்ல- சட்டத்தால் சாதிக்க முடியாததை அதிரடியாய் செய்து முடிக்கும் அபாரத் திறமை படைத்தவள்! முறைப்படி பயன்படுத்திக் கொண்டால் லாபம் நமக்கே!
அவள் நம் வழிக்கு வரும்வரை நானும் அவளுடைய நண்பன்தான்!


பென் டர்னர் கொள்ளை வேலைகளில் பெரிய கில்லாடி...! மாடஸ்டி "நெட்வொர்க்" என்ற கும்பலை நடத்திக் கொண்டிருந்தபோது அதில் வேலை செய்தான்!
மாடஸ்டி தொழிலை நிறுத்திய பிறகு பார்மிங்ஹாம் வங்கிக் கொள்ளையில் ஈடுபட்டான். 10 ஆண்டு ஜெயில் தண்டனை பெற்று இப்போது சிறையில் கிடக்கிறான்!
அவன் கொள்ளையடித்த 5 லட்சம் பவுண்ட்ஸ்.... எங்கு மறைத்து வைக்கப் பட்டுள்ளது என்பது அவன் ஒருவனுக்குத் தான் தெரியும்...
அதை அறியத்தான் மாடஸ்டி சிறைக்குப் போயிருப்பாள் என நினைக்கிறீர்களா?
நோ! நோ! நோ! அவளிடம் இல்லாத பணமா?
சிறையிலிருந்து மாடஸ்டி காரில் தேம்ஸ் நதிக்கரை அருகில் இருக்கும் வில்லியின் இருப்பிடத்திற்கு வந்தாள்...
ஹலோ வில்லி டார்லிங் - வெனிஸ் நகரம் எப்படி இருந்தது?
நமக்கு இலண்டன்தான் சரிப்படும் இளவரசி!
பென் டர்னரை சந்திக்கப் போயிருப்பதாக வெங் சொன்னான்!
யெஸ்! ஆனால் அங்கிருந்து புதியதொரு புதிருடன் திரும்பி வந்துள்ளேன்... உள்ளே போய் பேசுவோம் வில்லி!


பென்னுக்கு என்ன வேண்டுமாம்?
அவனுடைய மகள் போதை மருந்துக்கு அடிமையாகி இறந்துவிட்டதாகக் கூறினான். அவளைப்போல் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவ டிரஸ்ட் ஒன்றை ஏற்படுத்தும்படி என்னைக் கேட்டுக் கொண்டான்!
யாருடைய பணத்தில் - உன்னுடையதிலா?
அப்படிச் சொல்ல வில்லை... நானும் அப்படி நினைக்க வில்லை!
டிரஸ்ட் நிதிக்குப் பணம் எங்கிருந்து வரும் என பென்னிடம் நான் கேட்டபோது அவன் பதில் சொல்லவில்லை...
...கம்பி வலைகளுக் கிடையே ஏதோ ஒன்றை என்னை நோக்கித் தள்ளி விட்டு 'குட்பை' என்று சொல்லி விட்டுப் போய் விட்டான்!



மாடஸ்டியின் கைக் குட்டையிலிருந்து...
எரிந்து போன ஒரு தீக்குச்சி!
யெஸ் - இது மரத்தாலான குச்சி அல்ல!
இதுபோன்ற தீக்குச்சி மெழுகு பூசிய தாளினுல் மிக இறுக்கமாகச் சுருட்டி உருவாக்கப்பட்டது! அப்படித்தானே?
யெஸ்... எழுதுவதற்கு மிக ஏதுவான பொருள் இளவரசி!
நுணுக்கமாக எழுதுவதில் பென் டர்னர் பெரிய கில்லாடி! ஒரு சாதாரணத் தபால் தலையின் பின்பக்கம் பைபிளின் பாதியை எழுதி விடுவான்! அவன் கையில் இந்தத் தீக்குச்சி இருக்கிறதென்றால் ஏதோ விஷயம் இருக்கு என்று அர்த்தம்!
மெழுகுத் தாளினுல் சுருட்டப்பட்டிருந்த தீக்குச்சியை மிகவும் ஜாக்கிரதையாகப் பிரித்தாள் மாடஸ்டி...
ஏதோ மெல்லிய கிறுக்கலாய் தெரிகிறது... வெறும் கண்களால் படிக்க முடியாத அளவுக்குச் சிறியதாக உள்ளது!
புரொஜக்டர் ஒன்றையும், திரை ஒன்றையும் ஏற்பாடு செய்கிறேன்!
நீ பென் டர்னரை ஜெயிலில் சந்தித்த போது, போலீஸ்காரர்கள் கழுகு மாதிரி நோட்ட மிட்டிருப்பார்களே?
யெஸ்...!



...அதே நேரம் நாங்கள் பேசியதை சிறை அதிகாரி கேட்டிருப்பாரா என்பது சந்தேகம் தான்! பேசுவதை யாரும் ஒட்டுக்கேட்கக் கூடும் என்று நினைத்தே பென் தீக்குச்சி தந்திரம் செய்துள்ளான்!
கொள்ளையடித்த பணத்தில் பாதியை அவன் எங்கோ மறைத்து வைத்துள்ளான் என்பது போலீசுக்கும் தெரியும்! அதைக் கைப் பற்றவே அவர்கள் விரும்புகின்றனர்!
சினிமா புரொஜக்டர் மெழுகுதாளில் எழுதப் பட்டிருந்த நுண்ணிய எழுத்துக்களைத் திரையில் பிரதிபலித்தது...
அட ஆண்டவா... இந்த சின்னத்தாளில் 300 வார்த்தைகளுக்கு மேல் எழுதியுள்ளானே!
பெரிய கதைபோல் அல்லவா இருக்கு...!
ஸ்டூட்லி...! இது எங்கே இருக்கு?
நாட்டிங்ஹாம் அருகில் உள்ள ஒரு கிராமம்!
எனக்கு ஞாபகம் வருகிறது. டர்னர் அந்தப் பகுதியில் இருந்து வந்தவன்தான்... அவனுடைய தந்தை ஒரு காலத்தில் ஸ்டூட்லி மாளிகையில் பணியாற்றியவர்!


ஆக, கொள்ளையடிக்கப்பட்ட பணம் இப்போது ஸ்டுட்லி மாளிகையில் ஓர் அறையில் ரகசியமாக மறைத்து வைக்கப் பட்டுள்ளதாக்கும்! சுவாரஸ்யமான விவகாரம்தான்!
பென்னின் வரைபடம் அந்த அறை எங்கே இருக்கிறது- அதை எப்படித் திறப்பது என்பதையும் காட்டுகிறது! பயல் சரியான திறமைசாலிதான் இளவரசி!
யெஸ். இதில் உள்ள எல்லாவற்றையும் நாம் மனப்பாடம் செய்துவிடுவோம் வில்லி. தாள்களில் ரகசியம் இருப்பதை நான் விரும்பவில்லை!
அந்த துண்டுத்தாளை மாடஸ்டி தீ வைத்துக் கொளுத்தினாள்.
வெல்... 5 லட்சம் பவுண்ட்ஸ் நம் கைக்கு வர வாய்ப்பு உள்ளது. இந்தப் பணத்தைக் கொண்டு போதை மருந்துக்கு அடிமை யானவர்களுக்கு உதவிட ஒரு அமைப்பை ஏற்படுத்த பென் விரும்புகிறான்!
நல்ல காரியமாகத்தான் தெரிகிறது! கடைசி காலத்திற்குப் புண்ணியம் தேடியது போல இருக்கும்!
யெஸ்! நமக்கு இது வித்தியாசமான கேஸ்தான் வில்லி!
யார் கண்டது? இதைச் செய்து முடித்தால் நமக்கு சொர்க்கத்தில் இடம் கிடைக்கக் கூடும் இளவரசி!



இப்படி வேறு நப்பாசையா வில்லி? கமான்- கொஞ்சம் பயிற்சி செய்வோம்- சிந்தனையைத் தூண்ட உதவும்!
பத்து நிமிட சண்டைப் பயிற்சிக்குப் பின்னர்...
என்ன செய்யப் போகிறோம் இளவரசி?
நீதான் சொன்னாயே... உடற்பயிற்சி சிந்தனையைத் தூண்ட உதவுமென்று...
பென் டர்னர் கொள்ளையடித்த பணத்தைக் கொண்டு என்ன செய்யப் போகிறோம்?
இந்தத் தடவை பயிற்சியின்போது எந்த ஐடியாவும் ஏற்படவில்லை - மாறாக என்னது கவனத்தை திசை மாற்றி வசமாக அடிபட வைத்துள்ளது!
அம்பு எய்து பார்க்கலாம் என நினைக்கிறேன் வில்லி!
ஓ. கே!




மாடஸ்டி ஜெயிலுக்குப் போய் பென் டர்னரைச் சந்தித்தாள் என்பதை போலீசார் இந்நேரம் அறிந்திருப்பார்கள்!
யெஸ்...! நாம் கொள்ளைப் பணத்தைக் கைப்பற்றச் செல்வதாக இருந்தாலும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்!
பென்னின் நல்ல திட்டத்திற்காக நாம் அதை மீட்கப் போகலாம் அல்லது இது பற்றிப் போலீசில் சொல்லி விடலாம்- அல்லது இதை அப்படியே மறந்தும் விடலாம்
எப்படிச் செய்யப் போகிறோம் இளவரசி?
கொஞ்சம் பொறுத் திருப்போம்! அவசரப் படவேண்டாம்-
அதே நேரம் தேம்ஸ் நதியில் படகு வீடு ஒன்றில்...
மை டியர் பிரண்ட்ஸ், வார்ல்ஸ்டன் சிறையில் இருக்கும் பென் டர்னரை அங்கிருந்து வெளியே கொண்டுவரும் நமது இறுதித் திட்டம் தயார்!


...அழுக்குத் துணிகளை எடுத்துவரும் லாண்டரி வேன் சிறையிலிருந்து வழக்கமான பாதையில் புறப்படும்- ஆனால் வண்டியை ஓட்டுவதோ இங்குள்ள மிஸ்டர் வில்லியம்சாக இருக்கும்!
...நமது இலக்கான பென் டர்னர், வேனின் பின்புறம் மிஸ்டர் டிரிண்ட் மற்றும் மிஸ்டர் டால்மியின் ''கவனிப்பில்'' இருப்பான்!
இதோ இந்த வரைபடத்தில் பெருக்கல் குறி போடப்பட்டுள்ள இடத்தை மிஸ்டர் சங்க்ரோ சுட்டிக் காட்டுவார்! அங்கே வைத்துத்தான் லாண்டரி வேனில் இருக்கும் பென் டர்னர் வேறு வாகனத்திற்கு மாற்றப்படுவான்- ஏதேனும் சந்தேகம் இருந்தால் கேள்வி எழுப்புங்கள்!
இங்கே பார், பிரையர் - சிறையிலிருந்து அவன் தப்பி வர மறுத்து விட்டால் - நாங்கள் முரட்டுத்தனமாக நடக்க வேண்டியிருக்கும்! மறந்து விடாதே!
நல்ல பாய்ண்ட் மிஸ்டர் டால்பி - ஆனால், பென் டர்னரை முழுசாக் - ''நல்ல நிலையில்'' என்னிடம் கொண்டு வர வேண்டும் என்பதே நம் ஒப்பந்தம்!


நீங்கள் எடுக்கும் நடவடிக்கையினால் ஏதாவது ஆகி அவனுக்கு நினைவு தவறி விட்டால், உங்களை நிச்சயம் கொன்று விடுவேன்! மறந்து விடாதீர்கள்!
அங்கே - இன்ஸ்பெக்டர் புருக் மாடஸ்டியை சந்திக்க கார்வின் இடத்திற்கு வந்தார்...
மிஸ் மாடஸ்டியா? யெஸ்சார். தேம்ஸ் நதிக்கரையில் மிஸ்டர் கார்வினுடன் இருப்பார்!
தேங்க்ஸ்!
ஹலோ புருக்கி, புதிதாக என்ன சமாச்சாரம்?
இதற்கெல்லாம் கூட உனக்கு நேரமிருக்கா மாடஸ்டி?
எல்லாம் ஜாலிக்காகத் தான்...! இது எனக்குப் பிடித்தமான பொழுது போக்கு!
பென் டர்னரை எதற்காகப் பார்க்கப் போனாய்?
அடேயப்பா, போலீஸாரின் விசாரணையா?!


இரக்கமற்ற முறையில் என்னை சோதனை போடப் போகிறீர்களா? என்னுடைய பெயரையும் முகவரியையும் குறித்துக் கொள்ளப் போகிறீர்களா?
உளறுவதை நிறுத்து மாடஸ்டி!
சிறையில் யார் வந்து பென் டர்னரை சந்தித்தாலும் அவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்க ஒரு கருவி வைக்கப்பட்டிருக்கும். போதை மருந்துக்கு அடிமையானவர்களுக்கு உதவ டிரஸ்ட் அமைக்கும்படி அவன் உன்னிடம் கேட்டதை நான் அறிவேன்...
ஒட்டுக் கேட்டிர்களாக்கும்?!
...டிரஸ்ட் அமைத்திடப் பணம் எங்கிருந்து வரும் என நீ கேட்டபோது அவன் பதில் சொல்லவில்லை - அதாவது வாய் மொழியாகப் பதிலைச் சொல்லவில்லை! வேறு விதத்தில் அவன் உனக்குப் பதில் தந்திருக்க வேண்டும்!
கொள்ளையடித்த பணத்தை பென் எங்கு மறைத்து வைத்திருக்கிறான் என்பது உனக்குத் தெரியுமா?
புருக்கி, ஒரு பெண்ணிடம் இப்படியா கேள்வி கேட்பது?


அந்தப் பணம் டர்னருக்குச் சொந்தமானதல்ல! அதுபோல உனக்கும் சொந்தம் கிடையாது!
உண்மைதான்! வேறு என்ன விசேஷம் புருக்கி?
ஹ்ம்ம்ம்... சரியான கல்லுளிமங்கி தான்!
ஒரு வாரம் கழிந்தது -
நீங்கள் வெளியே போயிருந்த போது ஒரு போலீஸ்காரர் போன் செய்தார் பெயர் இன்ஸ்பெக்டர் புருக் என்றும் சொன்னார் - திரும்பி வந்த உடன் உங்களைப் பேசும்படிக் கூறினார்.
தேங்க்ஸ் ஜோ!
ஓ. மாடஸ்டி - இன்று காலை 9 மணி முதல் 10 மணி வரை நீ எங்கிருந்தாய் என என்னிடம் சொல்ல முடியுமா?


இங்கு எனது கிராமத்து வீட்டில் தான்! சர் ஜெரால்டு கூட சில நாட்களாகவே என்னுடன் தங்கியுள்ளார் - ஏன் கேட்கிறீர்கள் புருக்கி?
சர் ஜெரால்டு பிரிட்டிஷ் உளவுப் படைத்தலைவர் மாடஸ்டி, கார்வினின் உற்ற நண்பர்!
அப்படியானால் உன் மீது சந்தேகமில்லை மாடஸ்டி! வில்லியும் ஒரு நேர்மையான சாட்சியுடன் இருந்திருக்கிறான்!
சந்தேகமில்லையா? எதில் புருக்கி?
பென் டார்னர் ஜெயிலில் இருந்து தப்பி விட்டான் - இன்னும் முழு விபரங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்குள் நான் சந்தேகப்படும் சிலரை விசாரித்துப் பார்க்க நினைத்தேன்!
பென் தப்பி விட்டானா?... இது என்ன புதுக்கதை?
அன்று மாலை மாடஸ்டி வீட்டில்...
சிறையிலிருந்து தப்பிய குற்றவாளி இங்கு வந்து நின்றால் என்ன செய்வாய்?
அவன் வரமாட்டான்... நான் அடைக்கலம் தர மாட்டேன் என்று பென்னுக்குத் தெரியும்!




உன் மனதை ஏதோ அரிக்கிறதே மாடஸ்டி?
குழப்பம்!... ஆனால் அது ஏன் என்று எனக்கே தெரியவில்லை!
நாளை உங்களுடன் லண்டனுக்கு நானும் திரும்பி வரலாம் என நினைக்கிறேன் சர் ஜெரால்டு... வில்லியுடன் பேச வேண்டும்!
பிறிதொரிடத்தில் ஆழ்ந்த மயக்கத்திலிருந்த பென் டர்னர் சுயநினைவு பெற்றான்...
ஆ, மிஸ்டர் டர்னர்... என்னை நானே முதலில் அறிமுகப் படுத்திக் கொள்கிறேன்!
என்னுடைய பெயர் டக்! அதைத் தெரிந்து நீ பெரிய தாக எதையும் சாதிக்கப் போவதில்லைதான்!
நான் எங்கு இருக்கிறேன்...?
நிச்சயமாக ஜெயிலில் இல்லை மிஸ்டர் டர்னர். சீக்கிரத்தில் திரும்பாப் பயணம் ஒன்றில் ஈடுபடப் போகிறீர்கள் மிஸ்டர் டர்னர்!



தேம்ஸ் நதியில் ஒரு படகு வீட்டினுள் விசாரணை தொடர்கிறது -
நேரடியாக விஷயத்திற்கு வராதது குறித்து மன்னித்துக் கொள்ளவும்... பர்மிங்ஹாம் வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட பணம் எங்கு மறைத்து வைக்கப்பட்டுள்ளது என்பது உனக்கு நிச்சயமாகத் தெரியும்...
...உன்னிடமிருந்து அந்த உண்மையை வெளிக் கொண்டு வர நிபுணனான மிஸ்டர் சாங்ரோவை நியமித்துள்ளேன்!..
'பளிச்'சென்று பதில் சொல்லிவிட்டால், கவலை மிக்க இந்த உலகிலிருந்து, வேதனை யில்லாமல் 'டிக்கெட்' வாங்கி விடலாம்... ஆனால் முரண்டு பண்ணினால் - விளைவு களுக்கு நான் பொறுப்பல்ல!
பேச விரும்பாதவர்களிடமிருந்து விஷயங் களை வரவழைப்பதில் மிஸ்டர் சாங்ரோ பெரிய கில்லாடி.. எக்கச்சக்கமான வழிமுறைகளை வைத்துள்ளான்...
...சிலரிடம் லேசாக நடந்து கொண்டாலே நல்ல பலன் தரும்! மற்றவர்களுக்கு திடீர் அதிர்ச்சி - ப்ளஸ் ப்யங்கரமான வேதனை கொடுக்க வேண்டும் - எல்லாம் தொழில் ரகசியம்!


அடடே.. நான் சொன்ன இரண்டாவது வழிமுறைக்கு மிஸ்டர் டர்னர் ஆளாகி விட்டது போலிருக்கு!
நிசப்தமாய் இருக்கே, மிஸ்டர் சாங்ரோ - விசாரனை பலனளித்தது தானே?
டர்னர் செத்துவிட்டான்...
ஆனால் அவன் பேசினான்!
மை டியர் பிரண்ட், நீயும் கொஞ்சம் டீ சாப்பிடு! - உனக்கு ரொம்பத் தாகமாக இருக்கும்!
அவன் சொன்னதெல்லாம் இந்த டேப்பில் உள்ளது!
பிரமாதம்! ஆனால் விசாரணையின் இறுதிக் கட்டங்களின் போது பேச்சு சற்று தெளிவில்லாமல் இருக்குமென்று நினைக்கிறேன்!


அவன் சொன்னதை சுருக்கமாகக் கூற முடியுமா மிஸ்டர் சாங்ரோ?
வங்கியில் கொள்ளையடித்த பணத்தை டர்னர் ஸ்ரூட்லி கோட்டையில் மறைத்து வைத்துள்ளான்...! இந்த விஷயம் வேறு ஒருவருக்கும் தெரிந்துள்ளது - மாடஸ்டி பிளைசிக்கு!
அதே சமயம் மாடஸ்டியின் வீட்டில் -
ஜெயிலில் இருந்து தப்பிச் செல்ல பென் டர்னர் ஏற்பாடு செய்திருக்க மாட்டான் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்... அந்த அளவுக்கு அவன் பெரிய ஆள் அல்ல!
ஒருவேளை அவனை வெளியே கொண்டு வந்து விட்டால், அவன் மூலம் மறைத்து வைக்கப்பட்டுள்ள 5 லட்சம் பணத்தை மீட்க முடியும் என சிலர் நினைத்திருக்கலாம்... அப்படியிருந்தால் பென் பாடு மோசமாகிவிடும்!
பென்னின் ஆசையை நாம் நிறைவேற்ற வேண்டுமென்று எந்தக் கட்டாயமும் கிடையாதுதான்! ஆனால் நாமிருவரும் ஸ்டூட்லிக்குப் போக வேண்டும் வில்லி!
நிச்சயமாக இளவரசி - அங்குதான் ஆட்டமே நடக்கப் போகிறது!



மாடஸ்டியும் வில்லியும் வடக்கு நோக்கிப் புறப்பட்டனர்...
அடுத்த திருப்பத்தில் திரும்ப வேண்டும் வில்லி!
...பிரதான சாலையிலிருந்து விலகி ஸ்டூட்லி கிராமம் செல்லும் பாதையில் பயணத்தைத் தொடர்ந்தனர்...
இன்னும் இரண்டு மைல் தள்ளி ரயில் செல்லும் மேம்பாலம் ஒன்று வரும்! அதன் பிறகு நாம் இடது பக்கம் திரும்ப வேண்டும்...
எதிரே-
அதோ அவர்களுடைய கார் வருகிறது.. இந்த விமானத்தைக் கிளப்பி விடு!
யாரோ பொம்மை விமானத்தைப் பறக்க விடுகிறார்கள்!
ரேடியோ மூலம் கட்டுப் படுத்தக் கூடியது!
அந்த விமானம் திடீரென்று காரை நோக்கி மிகத் தாழ்வான உயரத்தில் பறந்து வந்தது...
தொலைந்தோம்!


கோட்டை விட்டு விட்டாய்?
அவன் விரைந்து செயல் பட்டு காரின் பாதையை மாற்றிவிட்டான்!
ஆனால் இப்போது அவனுடைய கார் ரோட்டை விட்டு ஓரம் கட்டிவிட்டது, சுலபமாக அடித்து விடுவேன்!
மேலே பறந்து வட்டமடித்து விட்டு...
மீண்டும் அந்த சைத்தான் நம்மை நோக்கியே வருகிறது!
இளவரசி... இது பொம்மை விமானம் மாதிரியே பட வில்லை எனக்கு!
உஷாராக இருக்க வேண்டும்...
மறுகணம் 25 ரக கைத்துப்பாக்கியின் முழக்கத்தைத் தொடர்ந்து பலத்த வெடியோசை கேட்டது!
பூம்!
புகை மண்டலம் நீங்கிய போது -
அவர்களை மடக்கி விட்டோமா? அவர்கள் மீது மோதும் முன்பே வெடித்தது மாதிரி இருந்தது! அது எப்படி என்றுதான் தெரிய வில்லை!
யாரும் அசையக் காணோம்! நேரில் போய் பார்த்து விடுவோம்!


வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்த பொம்மை விமானத்தை அந்த ரயில்வே மேம்பாலத்திலிருந்துதான் இயக்கியுள்ளனர் இளவரசி... அங்கிருந்து யாரோ நகர்வதைக் கண்டேன்!
யெஸ்... இரண்டு பேர் என நினைக்கிறேன்... முடிவு என்ன என்பதை அறிய கீழே இறங்கி வருவார்கள் !
நம்மை ஏன் கொல்ல முயன்றனர்? நாம் யாருக்கும் எதுவும் செய்யவில்லையே?
சமீபத்தில் செய்யவில்லைதான்... ஆனால் நமக்குப் பழைய விரோதிகள் உள்ளனரே!
பென்டர்னர் விவகாரத்திற்கும் இந்த சம்பவத்திற்கும் தொடர்பு இருக்க முடியாது... நாம் இதில் சம்பந்தப்பட்டுள்ள விஷயம் யாருக்கும் தெரியாது!
புருக்கியைத் தவிர... ஆனால் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் நம்மை வெடி வைத்து தகர்க்க முயற்சி செய்ய மாட்டார்!
வேறு யாராகயிருக்கும்?



கொலையாளிகள் நெருங்கி வந்தனர் -
பாசில்! என்ன ஆச்சு?
உப்?
வேறு ஒன்றுமில்லை! அவனுடைய கால்களை வாரிவிட்டு விட்டோம்!
துப்பாக்கியுடன் வந்த ஆசாமி வேகமாக பின்னே திரும்பிய போது..
கும்!
ஐயோ!
நம்மைக் கொல்ல இவர்களை அனுப்பியது யார் என்று விசாரிக்க வேண்டுமென்பதால் லேசாக உதைக்கப் போகிறேன் என்றாயே?
யெஸ்!.. ஆனால் வெடி குண்டு ஆசாமிகளைச் சகிக்க முடியவில்லை!
கோபத்தைக் கட்டுப் படுத்த முடியவில்லை! ஒரே போடாகப் போட்டு விட்டேன்!


ஸ்டூட்லி கிராமத்தினுள் நுழைந்தனர்...
டிராபிக் நெரிசல் மட்டும் இல்லாவிட்டால் இது பட்டிக்காடு போல்தான் தெரிகிறது இளவரசி..! கொஞ்சம் முன்பு ஒரு ஆசாமி வில்லும், அம்போடும் திரிவதைப் பார்த்தேன்!
மாடஸ்டி!
மாடஸ்டி டார்லிங்! என்னுடைய பிரார்த்தனைக்குப் பதில் உன் ரூபத்தில் கிடைத்து விட்டது! உலகப் புகழ் பெற்ற ராபின் ஹூட் விழாவுக்காக ஸ்டூட்லி வந்துள்ள உன்னை வரவேற்கிறேன்!
ராபின் ஹூட் விழாவா?
ஓ, யெஸ் டியர்! கதை - வசனம் - டைரக்ஷன் எல்லாமே அந்த உலகப் பிரசித்தி பெற்ற வேலையில்லாத மேதைதான் பார்த்துக் கொள்கிறார்! நான் குறிப்பிடும் மேதை வேறு யாருமல்ல - அடியேன்தான்!
உன்னுடன் இருப்பவர் வில்லி கார்வின் தானே?
அந்த ஹோட்டலில் காரை நிறுத்துங்கள்!



யார் இந்த குடாக்குப் பயல் இளவரசி?
பெயர் ஜிம்மி மொர்டன்! எனக்குத் தெரிந்த நாடக மேடை நண்பர்களில் இவரும் ஒருவர்! இதுவரை உருப்படியாக எதுவும் செய்ததில்லை! ஆனால் எப்போதும் சிரித்துக் கொண்டே இருக்கும் இவன் சுபாவம் எனக்கு பிடிக்கும்!
ஜிம்மி, இது நாள் வரைக்கும் ராபின் ஹூட் விழா பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை!
ஸ்டுட்லி மாளிகையின் பிரபுவுக்குத் திடீரென்று யோசனை உதித்தது! ராபின் ஹூட் வரலாற்றை நாடகமாக்க திட்டமிட்டார்! வேலையில்லாமல் திரிந்த என்னைப் பிடித்துப் போட்டு விட்டார்!
ஸ்டூட்லி! இதுதான் ராபின் ஹூட் பிறந்த இடம்! ராபின் ஹூட்டும் அவனுடைய தோழர்களும் ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போரிட மன்னருக்கு உதவியது இங்கேதான்!
இப்படி ஏதாவது ரீல் சுற்றிக் கொண்டேயிருப்பதால் எக்கச்சக்கமான டூரிஸ்ட்கள் இங்கே வந்து குவிகிறார்கள்! எனக்காக இந்த நாடகத்தில் ராபின் ஹூட்டின் காதலியாக நடிப்பாயா மாடஸ்டி?
நானா? மெயிட் மரியன் பாத்திரத்திலா?


அதே சமயம் மாடஸ்டியின் வீட்டில் -
மிஸ் மாடஸ்டி எங்கு போயிருக்கிறாள் என்று உனக்குமா தெரியாது? ரீல் விடாதே வெங்!
அறிஞர் எமர்சன் என்ன சொல்கிறார் என்றால், "மனசாட்சி சொல்வதை ஏற்றுக் கொள்வதில் தான் நம்பிக்கையே உள்ளது" இன்ஸ்பெக்டர்!
சாமர்த்தியமாகப் பேசுவதாக நினைப்பா பயலே? மாடஸ்டி வந்தால் இன்று காலை பென் டர்னரின் உடல் தேம்ஸ் நதியில் கண்டெடுக்கப்பட்டது என்று சொல்! அவன் சித்ரவதை அனுபவித்து செத்துப் போயிருக்கிறான்!
ஸ்டுட்லியில்...
அந்தக் கோட்டை எங்கே இருக்கு ஜிம்மி?
முதலில் அதைக் குடி! உன்னை அங்கு அழைத்துச் செல்கிறேன்!
அந்தக் காலத்தில் ஆட்சி செய்து வந்த மன்னர் சர் ரிச்சர்டு ராபின் ஹூட்டின் தோஸ்த்! எனவே எதிரிகள் அரசரின் கோட்டையைத் தாக்கிய போது...
ராபினும் அவரது தோழர் களும் காட்டிலிருந்து வந்து கோட்டையைக் காப்பாற்ற அவருக்கு உதவி செய்தனர்!



இதைத்தான் நாளை நடித்துக் காட்டப் போகிறோம் ராபின் ஹுட் விழாவில் கிளைமாக்ஸ் காட்சியே இதுதான்!
இந்த சமாச்சாரங்கள் எல்லாம் முடியும் வரை யாராலும் அங்கு மறைத்து வைக்கப் பட்டிருக்கும் பணத்தைத் தொட முடியாது.
எதிரிகளின் படைவீரர்களாக நடிப்பதற்கு 20 தடியன்களை ஏற்பாடு செய்து விட்டேன்! ராபின் ஹுட்டும் அவரது தோழர்களும் அம்பு விடுவதற்காக வைக்கோல் பொம்மை களையும் தயார் பண்ணிவிட்டேன்! ...
..ஸ்டுட்லி கிராமத்து அம்பு எய்யும் கிளப்பினர் ராபின் ஹுட்டின் தோழர்களாக நடிக்கின்றனர்!
பணம் இருக்கும் ரகசிய அறை கோட்டையின் தெற்குப் பகுதியில் இருக்கும் என்று நினைக்கிறேன்!
யெஸ்...!


ஆ! அதோ நமது ராபின் ஹூட்! கொஞ்சம் அரை லூஸ் மாதிரி இருப்பார்தான் - ஆனால் உள்ளூர் அம்பு எய்யும் கிளப்பின் கேப்டனாக இருப்பதால் அவரையே இந்தப் பாத்திரத்திற்குப் போட்டு விட்டேன்!
''பச்சை வனப் பாவை'' மரியனாக நடிக்கும் உனக்காக அட்டகாசமான ஒரு டிரெஸ் ரெடி பண்ணியுள்ளேன் மாடஸ்டி! பார்த்தால் அசந்து போவாய்!
ஜிம்மி நான் நடிப்பதாகச் சொல்லவில்லையே...
எனக்காக நிச்சயம் நடிப்பாய் என்று தெரியும் டியர்! நானும் கூட சின்னதொரு வேஷத்தில் நடிக்கிறேன்! வேண்டுமானால் வில்லியும் லிட்டில் ஜானாக நடிக்கலாம்!
சும்மா கவர்ச்சிக் கன்னியாக நான் வந்து போகணுமாக்கும்?
அது மட்டுமல்ல - நீயும் அம்புவிட வேண்டும்!
...நீயும் வில்லியும் ஒருவரை ஒருவர் தாக்குவது போலவும் போலியாகச் சண்டை போடலாம்!


மாடஸ்டியையும் வில்லியையும் ஓட்டல் ஒன்றில் இறக்கி விட்டான் ஜிம்மி...
5 மணிக்கு மேக்கப்! 7 மணிக்கு ஒத்திகை! உங்களைப் பின்னர் சந்திக்கிறேன்!
சரியான கோமாளி!
அதுதான் ஜிம்மி...! நாம் குளித்து விட்டு லைட்டாக சாப்பிடுவோம்! அந்த சந்தர்ப்பத்தில் சீக்கிரம் நோட்டம் விடுவோம்!
இதற்கிடையே - பிரையரும் அவனது ஆட்களும் ஸ்டூட்லி வந்து சேர்ந்தனர்...
ரம்யமான கிராமம்! பற்றாக்குறைக்கு ராபின் ஹுட் விழா வேற? நமது அதிர்ஷ்டம் தான்!
இன்னும் மிஸ் மாடஸ்டி மற்றும் அவளது நண்பரின் சடலம் கண்டு பிடிக்கப்படாமல் இருப்பது ஆச்சரியமாக இருக்கு!
அந்த ஹோட்டலில் நின்று இளைப்பாறுவோம்!



இங்கிலாந்துக்கே உரிய அருமையான டீ! ஆஹா!
என்னால் நம்ப முடிய வில்லையே? என்னுடைய பிரார்த்தனைக்குப் பதிலாக நீ கிடைத்து விட்டாய் மை டியர் தோழா!
அன்பரே - நீர் யார்?
நான் தான் ராபின் ஹுட் விழாவின் டைரக்டர்! எனது நாடகத்தில் பிரையர் டக் வேடத்தில் நடிக்க ஒரு ஆள் தேவைப் படுகிறது! ஸ்டூட்லி கோட்டையில் நாடகம் நடக்கவிருக்கிறது!
ஸ்டூட்லி கோட்டையிலா? வெல்... வெல்...
விநோதங்கள் ஓய்வ தில்லை! என் பெயர் கூட டக் தான். எனக்கு வேண்டியவர்கள் என்னைப் பிரையர் என்றும் அழைப்பர்!
ஜிம்மி தனது ராபின் ஹுட் நாடகம் பற்றி விளக்கிய பிறகு...
உங்களுக்காக பிரையர் டக் பாத்திரத்தில் நான் நடிக்கிறேன்!
அபாரம்! நீங்கள் தங்கமான மனிதர்!



நானும் எனது நண்பர்களும் ஜாம் தயாரிப்பாளர்கள்! விற்பனை விஷயமாக டூர் வந்துள்ளோம்! இன்னும் ஏதாவது வேடங்களுக்கு ஆள் வேண்டுமானாலும் கூட சொல்லுங்கள் - என் தோழர்கள் உதவிடுவார்கள்!
ராபின் ஹுட்டின் தோழர்களாக நடிப்பதற்கு ஆட்கள் உள்ளனர்..! வேண்டுமென்றால் எதிரிப்படையினராக உங்கள் ஆட்களில் சிலரை நடிக்க வைக்கலாம்!
ஓ.கே.! கலைச் சேவைக்காக எங்களை அர்ப்பணிக்கத் தயாராகி விட்டோம்!
அதைத் தொடர்ந்து -
எப்படி?
பிரமாதம்! பிரையர் டக்கே மீண்டும் உயிருடன் வந்து விட்டது போல இருக்கு! உங்களுடைய நண்பர்களுக்கும் மேக்கப் நடந்து வருகிறது!
அத்தனை பேருக்கும் வேஷப் பொருத்தம் கன கச்சிதம்!
கிராமத்தின் மற்றொரு மூலையில்....
வெங் லைனில் இருக்கிறான் இளவரசி ரொம்ப முக்கியமான விஷயமாம்!


இன்ஸ்பெக்டர் புருக் இங்கு வந்தார் மிஸ் பிளைசி...
நீங்கள் எங்கே போயிருக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது என்று சொல்லிப் பார்த்தேன் - அவர் நம்பவில்லை! பென் டர்னர் பற்றி ஒரு விஷயம் சொன்னார்...
ம்ம்ம்.. சொல்லு! யெஸ்..! இன்று காலையிலா? அப்படியா? தேங்க்யூ வெங்!
பென் டர்னர் செத்து விட்டானாம்... அவனது சடலம் தேம்ஸ் நதியில் கண்டெடுக்கப் பட்டுள்ளது.... அவனை யாரோ சித்ரவதை செய்துள்ளனர்!
பாவம் பென்!
சாகடிக்கும் முன்பு அவனைப் பேசும்படி செய்திருந்தால் - ஸ்டூட்லி கோட்டையில் பொக்கிஷம் இருக்கும் விஷயம் ரகசியமாக இராது!


பணத்தை எடுக்கப் பயல்கள் வருவார்கள்!
குட்!
அப்படி வருபவர்கள் ராபின் ஹுட் விழா முடியும் இரவு வரை காத்திருந்து, பின்னர் தான் செயலில் இறங்குவார்கள்!
ஆனால் நாம் முந்திக் கொண்டு நாளைப் பொழுது சாய்ந்த உடனே பணத்தைக் கைப் பற்ற வேண்டும்..! நாடகத்தில் கோட்டையை முற்றுகையிடும் காட்சி நடந்த உடன் நாம் காரியத்தை முடிக்க வேண்டும்!
யெஸ்.. பென்னின் மரணத்திற்கு அவர்கள் பதில் சொல்லியே ஆக வேண்டும்!
மறுநாள் இரவு வரை வரப் போகிறவனுக்காக நாம் தயாராகக் காத்திருக் கலாம் இளவரசி!
ஸ்டூட்லி ஓட்டலில்...
ஆ... எனது மதிப்பிற்குரிய தோழர்கள்!


மாடஸ்டி பிளைசியையும், வில்லி கார்வினையும் தீர்த்துக் கட்டி விட்டீர்களல்லவா?
அது.. வந்து... தப்பு நடந்து விட்டது பிரையர்!
பளார்!
அது எனக்கும் தெரியும் கண்ணா - அவர்கள் இருவரையும் சற்று முன்னர்தான் நேரில் பார்த்தேன்!
''பச்சை வனப் பாவையாக'' நடிக்கும் மிஸ் மாடஸ்டிக்கு பணம் பதுக்கப்பட்டுள்ள ரகசிய அறையைக் கண்டுபிடிப்பது ரொம்ப சுலபமான வேலை! உன்னுடைய முட்டாள் தனம் மன்னிக்க முடியாதது!
ஆ... ப்..ப்ளீஸ் பிரையர்!
அதிர்ஷ்டவசமாக நாடகத்தில் நானும் நடிக்கிறேன்! பச்சை வனப் பாவை மீது என் கண் எப்போதும் இருக்கும்!
நாடக ஒத்திகை பார்க்க நேரமாகிவிட்டது! இப்போது மிஸ் பிளைசிக்கு உங்களை நன்கு அடையாளம் தெரியும். எனவே, அவளுடைய கண்களில் பட்டுவிடாதபடி இருந்து கொள்ளுங்கள் - இல்லையேல் உங்களுக்கு சமாதி இங்கேயே கட்டி விடுவேன்!



கோட்டையை முற்றுகை யிடும் காட்சி ஒத்திகை பார்க்கப்பட்டது..
ப்ளீஸ் - அமைதியாக இருங்கள்! ஷெரீப் இங்கே நில்லுங்கள்! நார்மன் படையினரே இங்கு நில்லுங்கள்! ராபினும் அவனது தோழர்களும் அந்தப் பக்கமாக நில்லுங்கள்!
ஹலோ, நான் தான் ராபின் ஹூட் - இந்த வில் நன்றாக இருக்கா?
ரொம்ப ஜோர்! எனக்கு இரவல் கொடுத்ததற்கு மிக்க நன்றி!
இன்று இரவு அந்தக் கொள்ளைப் பணத்தை எடுத்துவிட முடிந்தால் நன்றாக இருக்கும் இளவரசி!
அதற்கு வாய்ப்பில்லை...
இன்று இரவு முழுவதும் கோட்டைக்கு லைட் மாட்டும் வேலை நடக்கப் போவதாக ஜிம்மி சொன்னார்!



ஆனால் கூட்டத்தோடு கூட்டமாக் நிற்கும் போது நீங்கள் நைசாக நழுவிப் பணம் இருக்கும் அறையின் கதவைக் கண்டு பிடியுங்கள்!
ஓ.கே!
குட்! குட்! நார்மன் படையினரே - நீங்கள் எல்லோரும் சாவதற்காக நிற்கிறீர்கள். தயவு செய்து ஒட்டு மொத்தமாக கீழே படுத்துக் கொள்ளாதீர்கள்!
நீங்கள் மூன்று முறை கோட்டை மீது தாக்குதல் நடத்த வேண்டும்! அப்போது ஏராளமான பொம்மை அம்புகளால் உங்களை எதிர்ப்பார்கள்! அப்போது தான் சாவதாக நடிக்க வேண்டும்!
நார்மன் ஆட்களாக நடிப்பவர்களுடன்.. சங்ரோவும் பிரையரின் ஆட்களும் இருந்தனர்...
தாகம் நாக்கை வறட்டுது!
வாயை மூடு!
சண்டைக் காட்சியின் ஒத்திகை –
குட் ஈவ்னிங் மிஸ். நாடகத்தில் அடியேன்தான் சர் ரிச்சர்டு!
ஹலோ, சர் ரிச்சர்டு!



இன்று ரொம்ப உஷ்ணமாக இருக்கிறதல்லவா - இந்த கூல் டிரிங்கை சாப்பிடுங்கள்!
ரொம்பத் தாராள மனசுள்ள வீரர் நீங்கள்!
அது சரி, கார்வின் எங்கே?
கார்வினோ -
சாதாரணப் பூட்டுதான்... இதனால் எதுவும் பிரச்சனை வராது!
நள்ளிரவு நேரத்தில் ஸ்டூட்லி கிராமத்தில் ஓட்டலுக்கு வெளியே...
நான் மாடஸ்டியைக் கொல்ல வேண்டும் என நினைக்கிறீர்களா?
மை டியர் மிஸ்டர் சாங்ரோ, நான் கொலைக்கு எதிரானவன் அல்ல. ஆனால் கொலையால் சடலங்கள் மிஞ்சுகின்றன! இது பெரிய பிரச்சனையாகி வருகிறது..!
எனவே நாளைய கொலைகளை ஸ்டூட்லி கோட்டையில் செய்வோம்! சடலங்களை ரகசிய அறையில் வீசி விடலாம்!
ராபின் ஹூட் விழாவின் இறுதி நாளும் வந்தது -
உங்களுடைய நண்பர்களால் நார்மன் படையினர் எண்ணிக்கை கூடிவிட்டது!
மை டியர் நண்பா...
ஜாம் தொழிற்சாலை நடத்தும் எங்களுக்கு இது ஒரு மாற்றமாகவே இருக்கிறது!



மாடல் விமானத்தில் வெடிகுண்டு வைத்து நம்மைக் கொல்ல முயன்றவர்கள் கண்ணில் படுகிறார்களா எனக் கவனித்துக் கொண்டிருக்கிறேன்!
நானும் தான் இளவரசி...
...ஆனால் அவர்கள் இந்தக் கூட்டத்தில் இருப்பதாகத் தெரிய வில்லை. அவர்களுக்கும் இந்த விவகாரத்திற்கும் தொடர்பில்லை எனத் தெரிகிறது!
உண்மை அதுவல்ல!
தலை சுடுவது நரக வேதனையாக இருக்கிறது பாசில்!
முட்டாளே - இந்த ஹெல் மட்டைக் கழற்றாதே - அவர்கள் உன்னை அடை யாளம் கண்டு கொள்வர்!
அருமையான மாலைப் பொழுது இளவரசி!
ஏய், லிட்டில் ஜான்! அவளை மரியன் என்றே கூப்பிடு!
சாரி, ஜிம்மி. நான் மறந்து விட்டேன்!
என்னை ஆலன் - அ-டேல் என்றே கூப்பிடு புரிகிறதா?


அட ஆண்டவா - கற்றுக் குட்டி நடிகர்களை எல்லாம் ஏன்தான் இதில் சேர்த்தேனோ?
பதட்டப்படாதே ஆலன்! சமாளித்து விடுவோம்!
ஸ்டூட்லி கோட்டைக்குப் பின்னர் சூரியன் மறைந்த போது, நார்மன் ஆட்களை மூன்றாவது தடவையாக அம்பு மழையால் துரத்தும் காட்சி நடந்து கொண்டிருந்தது!
ரைட்! அம்பு எய்வதற்கு ராபின் ஹுட்டும் மரியனும் தயாராகுங்கள், ப்ளீஸ்!
இப்போது உண்மையான அம்புகள் இலக்குகள் மீது பாய்வதைப் பாருங்கள்!



அற்புதமான ஷாட் மரியன்! இதே போல் மீண்டும் ஒரு முறை!
அதே சமயம் - சண்டைக் காட்சியில் 'செத்துப்போன'. சில நார்மன் ஆட்கள் கோட்டைக்குப் பின்புறம் இருந்த அகழியைக் கடக்கும் வேலையில் இறங்கினர்..
உன்னை யாரும் பின் தொடர்ந்தார்களா?
நோ - அவர்கள் எல்லாரும் நாடகக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்!
ராபின் ஹுட்டும் மரியனும் தங்களுடைய அம்பு எய்யும் திறமையைக் காட்டி முடித்தனர்..
கோட்டையின் பின்னே வெளிச்சுவர் அருகிலோ
சீக்கிரம் போங்கள் நண்பர் களே - நீங்கள் மறைந்து கொள்வதற்கு இங்கே ஏராளமான அறைகள் உள்ளது!
நாடகம் ஒரு வழியாக முடிந்தது...
தேங்க் யூ ஜென்டில்மேன்! நீங்கள் எல்லாரும் அற்புதமாக நடித்து விட்டீர்கள்!


மாடஸ்டியையும் வில்லியையும் யாராவது பார்த்தீர்களா?
யாரவர்கள்? ஓ 'பச்சைவனப் பாவை' மரியனும் லிட்டில் ஜானுமா? அவர்கள் நாடகம் முடிந்த உடனேயே வெளியேறி விட்டனர்!
யாரும் வருகிறார்களா என வாசலில் மாடஸ்டி காவல் காக்க வில்லி பூட்டைத் திறக்கும் வேலையில் ஈடுபட்டார்...
திறந்து விட்டது இளவரசி!
மாடஸ்டியும் வில்லியும் மாளிகைக்குள் நுழைந்தனர் -
பென்டர்னரின் வரை படத்தின்படி மெயின் ஹாலின் வலது பக்கமாக நாம் திரும்ப வேண்டும்...
கோட்டையின் குதிரை லாயத்திலோ -
அவர்கள் உள்ளே போய் விட்டனர் பிரையர்!
அபாரம் - இனித் தொடர்ந்து போய் அவர்கள் இருவரையும் மடக்கிப் பிடி!
நீ போக வேண்டாம் மிஸ்டர் சாங்ரோ.. நாம் இம்முறை மோதுவது புலிகளுடன்! நீயும் நானும் "ரிசர்வாக" இங்கே இருப்பது நல்லது என நினைக்கிறேன்!



அவர்கள் யாரையும் துப்பாக்கியுடன் செல்ல அனுமதிக்க வில்லையே மிஸ்டர் சாங்ரோ?
நன்றாக சோதித்து விட்டேன் - எவனிடமும் துப்பாக்கி கிடையாது!
மாடஸ்டியும் வில்லியும் மிகப் பெரிய ஹால் ஒன்றின் வழியாகக் கடந்தனர்...
இன்னொரு கதவு இருக்கிறது! அதுவும் பூட்டிக் கிடக்கு!
ஒரு நிமிடத்தில் திறந்து விடலாம் இளவரசி! இதை மட்டும் கொஞ்ச நேரம் வைத்திரு!
இந்தக் கட்டையை ஏன் தான் கையில் தூக்கிக் கொண்டு வந்தேனோ..?
அதை அதிர்ஷ்டம் என்றே சொல்வோம் வில்லி..! நம்மை யாரோ பின் தொடர்ந்து வந்துள்ளனர்!
பிரையரின் ஆட்கள் முரட்டு வாளுடன் பாய்ந்தனர். கம்பைக் கொண்டு வில்லி தற்காப்பு நடவடிக்கையில் இறங்கினார்...
இளவரசி... இவன்களை என்னால் தடுத்த நிறுத்த முடியும். அதற்கு மேல் - ஊஹூம்!
என்னிடம் ஒருவனைத் தள்ளிவிட்டு விட்டு மற்றவர்களைக் கவனிக்கலாமே?


மாடஸ்டியும் வில்லியும் ஜோடி சேர்ந்து தாக்குதல் நடத்தினர்...
சமாளித்து விடலாம்!
திடீரென்று ஏற்பட்ட கைகலப்பில் நிலைமை வேறு விதமாக மாறியது!
இன்னொருவனை இங்கே அனுப்பலாம் வில்லி!
இதோ வந்து கொண்டிருக்கிறான்!
ஐயோ!
எல்லாம் சரியான சோதாக் கோஷ்டி!
பிரையரின் கடைசி ஆளும் மண்ணைக் கவ்வினான்...!
மடேர்!


வெல். இந்தக் கும்பல்தான் பென் டார்னரை சித்ரவதை செய்து பேசும்படி செய்திருக்க வேண்டும்!
மாளிகையில் கொள்ளைப் பணம் இருப்பதைத் தெரிந்து கொண்டு நார்மன் ஆட்கள் வேஷத்தில் நாடகத்தினுள் புகுந்துள்ளனர்! கில்லாடிப் பயல்கள்!
வரும் நடை பாதையில் ஒரு சிறிய அறையைக் கண்டேன் - நாம் இவர்களை அங்கு போட்டுப் பூட்டிவிடுவோம்!
நமக்கு வேகம் குறைந்து வருகிறதென்று நினைக்கிறேன் வில்லி! நாளை இரவுதான் இவன்கள் கைவரிசையைக் காட்டுவார்கள் - நாம் தயாராகக் காத்திருக்கலாம் என்று திட்டமிட்டு இருந்தோம்!
ஆனால் இவன்களோ இன்றே நம்மை திகைக்க வைத்து விட்டார்கள்! நாம் இன்னும் சுறுசுறுப்பாக வேண்டும் வில்லி!
நிஜம்தான் இளவரசி!
எப்படியோ நாம் சமாளித்து விட்டோம்! இனி எந்தப் பிரச்சனையும் கிடையாது!
இனி நாம் புறப்பட்டுப் போவோம் மிஸ்டர் சாங்ரோ!



கவனியுங்கள்... யாரோ முனகும் சப்தம் போல் எனக்குக் கேட்டது!
அப்படியானால் அது யாரென்று பார்ப்போம்!
யாரங்கே?
பிரையர்! நாங்கள் இங்கு அடைபட்டுக் கிடக்கிறோம். அப்புறம் நம் ஆட்களில் சிலர் ரொம்ப மோசமான நிலையில் உள்ளனர்! அவர்கள் எங்களை எதிர்பாராத விதத்தில் தாக்கி விட்டார்கள்! தயவு செய்து திறந்து விடுங்கள்!
இங்கு சாவியைக் காணோம்...
அது உங்களுடைய அதிர்ஷ்டமாகவும் இருக்கலாம்! பொறுமையாக இருந்து பிரார்த்தனை செய்யுங்கள்... அதாவது நான் திரும்பி வரும் போது உங்களை மன்னிக்க கூடிய மனநிலையில் இருக்க வேண்டுமென்று!
அதுதான் கணப்பு அடுப்பு!
பென் டர்னரின் தகவல் படி அங்கிருக்கும் வட்ட வடிவ குமிழை இடது புறமாகச் சுற்ற வேண்டும்...
கொஞ்சம் கடினமாக இருக்கு, ஆனாலும் நகர்கிறது!



ஒன்றும் பலனில்லையே?
பொறு! இளவரசி! உள்ளே தண்ணீர் ஓடும் சப்தம் கேட்கிறது!
நிச்சயம் பலனிருக்கும் பாரேன்!
கரெக்ட் வில்லி!
திடீரென்று இரும்புச் சங்கிலிகள் ஒலியுடன் சுவர் மேல் நோக்கி உயர்ந்தது... உள்ளே ஒரு படிக்கட்டு தெரிந்தது...
அடடே... அலாவுதீன் கதையில் வருவது போல் இருக்கிறதே!
இனி அந்த 5 லட்சம் கரன்சி நோட்டுகள் கிடைத்து விட்டால் போதும்!
இவ்வளவு பெரிய ரகசிய அறையை அந்தக் காலத்தில் எதற்காகக் கட்டினார்களோ?!
தேவைப்படாத பொருட்களையோ - ஆசாமிகளையோ போட்டு மூட இதைப் பயன் படுத்தியிருக்கலாம்!



கோட்டையின் பிரிதொரு இடத்தில்...
எ. - என்ன நடந்தது...?
பிளைசியும் கார்வினும் நம்மை செம்மையாக உதைத்து இந்த அறையில் பூட்டி வைத்து விட்டுப் போய் விட்டனர்.. அதன்
பின்பு பிரையர் வந்தார்... ஆனால் அவர் நமக்கு உதவப் போவதில்லை...!
திறமையற்ற ஊழியர்களை என்னால் சகித்துக் கொண்டிருக்க முடியாது மிஸ்டர் சாங்ரோ - அடடே ரகசிய அறை!
எதற்காக தண்ணீர் புகாத பை இங்கே? இங்கு ஒரு சொட்டுத் தண்ணீர் கூட கண்ணில் படவில்லையே!
எப்போதும் இப்படியே இருக்காது... அங்கே பார் ஒரு அங்குல ஆழத்திற்கு தண்ணீர் இருக்கு!
விநோதம்தான்... தண்ணீர் எங்கிருந்து வருகிறது என்பது தெரியவில்லை! மழை காலத்தில் அகழி நீர் பெருகி இங்கு கொஞ்சம் வந்திருக்கும் என்று நினைக்கிறேன்...
ஓ யெஸ்... இதோ ஒரு இரும்பு வலையுள்ளது!
500 ஆண்டுகளுக்கு முந்தைய கட்டிடக் கலை பற்றிய ஆராய்ச்சியை பின்னர் வைத்துக் கொள்வோம் வில்லி!



படிக்கட்டில் ஆபத்து காத்திருப்பது அவர்களுக்குத் தெரியாது!
நான் ஒரு வார்த்தை சொன்ன உடன் லைட் அடி மிஸ்டர் சாங்ரோ!
யெஸ்!
வில்லி தன் கத்தியை எடுக்க முயன்ற அதே கணத்தில் சைலன்சர் பொருத்தப்பட்ட துப்பாக்கியின் ஆழமான உறுமல் சப்தம் எழுந்தது!
டுப்!
ஆ!
மாடஸ்டி சுடப்பட்டாள்...
பணம் அடங்கிய சாக்குப் பையை இருளினுள் வீசியெறிந்து விட்டு முன்னே பாய்ந்தார் வில்லி...


அதே வேகத்தில் கத்தியையும் வீசியெறிந்தார்.
இளவரசி?
நீங்களாகவே தனியாகச் சமாளிக்க வேண்டும்... வில்லி!
வில்லியின் கத்தி சங்ரோவின் தலைக்கு மேல் பறந்து சென்று சுவற்றில் எதன் மீதோ பட்டு விழுந்தது.
அந்தப் பக்கமாக லைட்டைத் திருப்பு மிஸ்டர் சாங்ரோ. அப்பத்தான் அவனையும் சுட முடியும்!
கவனி! ஏதோ ஒரு எந்திரம் நகர்கிறது - அந்தக் கத்தி எதையோ செயல்படச் செய்து விட்டது...
தூரத்தில் கேட்ட இரும்புச் சங்கிலிகள் உருளும் சப்தத்தைத் தொடர்ந்து கல் சுவர் ஒன்று தானாக நகர்ந்தது...
பிரையர்! வாசல் கதவு மூடுகிறது!
எதிர்பாராத விதமாக வில்லியின் கத்தி ரகசிய அறையை மூடச் செய்யும் எந்திரத்தை முடுக்கி விட்டது...
நாம் வசமாக மாட்டிக் கொண்டோம்!
உணர்ச்சி வசப்படக் கூடாது!



முதலில் இந்த இருவரையும் தீர்த்துக் கட்டு வோம். அதன் பிறகு பிரச்சனை மீது முழு கவனம் செலுத்துவோம் மிஸ்டர் சாங்ரோ!
எங்களைச் சுட்டுக் கொன்றுவிட்டால் பிரச்சனை தீர்ந்து விடாது தம்பி!
இங்கிருந்து வெளியே போகும் வழி எங்களுக்கு மட்டும்தான் தெரியும்! எங்களைக் கொன்று விட்டால் நீ இங்கேயே சமாதிதான்!
மிஸ்டர் கார்வின் இல்லாமல் நாம் சமாளித்து விடலாம் என்றே நினைக்கிறேன்- நம்முடைய கூட்டாளிகள் நம்மைக் கண்டு பிடித்து விடுவார்கள்!
நோ! அவர்களுக்கு நம்மை எங்கே போய் தேடுவது என்பதோ, எப்படி வெளியே கொண்டு வருவது என்பதோ தெரியாது!
தவறு நடந்து விட்டதற்கு நீ என்ன தண்டனை தருவாயோ என்று பயந்து போய் இருப்பார்கள்! இந்த அறையிலிருந்து அவர்கள் தப்பித்த மறுகணம் எங்கேயாவது ஓடி மறைந்து விடுவர்!
ஹ்ம்ம்ம்....
இங்கிருந்து வெளியேற உனக்கு வழி தெரியுமென்று சொன்னாயல்லவா, அதைச் சொல்வது தான் நல்லது மிஸ்டர் கார்வின்!
நான் செய்ய வேண்டிய வேலைகளை முடித்த பிறகு சொல்கிறேன்! அதுவரை பொறுமையாக இரு!


வெளியே போக இவனுக்கு வழி தெரியுமென்றால் இவனை விரைவில் பேச வைக்கிறேன்!
மனிதர்களைச் சரியாக எடை போடத் தெரியாத ஆளாய் நீ இருக்கிறாய் மிஸ்டர் சாங்ரோ... எல்லா நேரங்களிலும் வன் முறையை பயன்படுத்தி வெற்றி கொண்டிட முடியாது! சில நேரங்களில் சமரசமே ஜெயம் தரும்! இது இரண்டாவது ரகம்!
உன் சிகிச்சை தொடரட்டும் மிஸ்டர் கார்வின்! ஆனால் சந்தேகப்படும்படியாக நீ ஏதாவது செய்தால் உன் அழகான தோழியின் மண்டையில் ஓட்டை போட்டு விடுவோம்!
மாடஸ்டிக்கு சுய நினைவு திரும்பியது -
வில்லி..? என்ன நடக்கிறது...?
கனரகத் துப்பாக்கித் தோட்டா உன்னுடைய விலாவில் உரசிச் சென்று எலும்பை முறித்துள்ளது. நிறைய ரத்தம் சேதமாகி உள்ளது!
இப்போதைக்கு இரத்தக் கசிவை நிறுத்தியுள்ளேன்!
மிஸ் பிளைசி, நாம் எல்லோரும் இந்த ரகசிய அறையில் சிக்கிக் கொண்டு விட்டோம்...


இங்கிருந்து வெளியேற வழி தெரியும் என்று கார்வின் சொன்ன ஒரே காரணத்திற்காகத் தான் நீங்கள் இன்னும் உயிருடன் இருக்கிறீர்கள்- இப்போது கார்வினைப் பேசச் சொல்!
வழியைச் சொன்ன உடன் எங்கள் இருவரையும் நீ கொல்ல மாட்டாய் என்பது என்ன நிச்சயம்?
நிச்சயம் கிடையாதுதான் மிஸ்டர் கார்வின்!
ஆனால், மிஸ்டர் சாங்ரோவும் நானும் உண்மையில் ரொம்ப நல்ல மனிதர்கள். தேவையில்லாமல் கொலை போன்ற வன்முறையில் ஈடுபட மாட்டோம் - கொள்ளையடிக்கப்பட்ட 5 லட்சம் எங்களுக்கு வந்தாலே போதும். திருப்தியுடன் போய் விடுவோம்!
ஆல் ரைட்..!
வில்லி என்ன செய்யப் போகிறார் என்பது கடவுளுக்குத் தான் தெரியும்! எப்படியோ நேரத்தை கடத்த வழி செய்து விட்டார்...
நாங்கள் காத்திருக் கிறோம் மிஸ்டர் கார்வின்!
அவசரப் படுத்தாதீர்கள். உன்னை நிமிர்த்தி உட்கார வைக்கிறேன் இளவரசி - ரத்தம் கசிவது குறையும்!


வெளியே செல்ல வழி தெரியும் என்றது கதை தானே?
நோ - ஒரு சின்ன யூகத்தில் தான்!
உனக்குப் பின்னால் ஒரு பென்சில் டார்ச்சும் என்னுடைய கத்தியும் உள்ளது!
மாடஸ்டியைக் கண் காணிக்க பிரையர் நெருங்கி வந்தான்...
கார்வின் - இதுவே கடைசி வாய்ப்பு? நாம் இங்கிருந்து எப்படி வெளியே போவது?
இந்த இரும்பு வலை வழியாகத்தான்! அதன் அடியில் தண்ணீர் இருக்கிறது. தண்ணீர் ஓடும் குகை கோட்டையின் அகழியோடு இணைக்கப் பட்டிருக்கும் என்பது என் யூகம்!
இது வழியாகவா?
நம்மில் ஒருவர் போனால் போதும்... 120 அடி தூரத்திற்கு மேல் நீந்திச் செல்ல தேவை இருக்காது!


நீ குகை வழியாக நீந்திச் சென்றால் போதும் - அகழி வந்து விடும். அதன் பிறகு கோட்டைக்குள் போய் இந்த ரகசிய அறையின் குமிழை சுழற்றினால் நாம் எல்லோரும் வெளியேறி விடலாம்!
நானா?
நீ நல்ல நீச்சல் வீரன் தானே கார்வின்?
ம்ம்ம்... நன்றாகவே நீந்துவேன்.. ஆனால் நா-நான் மட்டும் முந்திச் செல்ல விரும்பவில்லை!
முதலில் அந்த இரும்பு வலையை அகற்றும் வேலையைத் துவக்குங்கள்! அதுவே பெரிய வேலை!
இவன்களை ஏமாற்ற வில்லி என்ன, திட்டம் போடுகிறாரோ...? யெஸ்... புரிகிறது என்று நினைக்கிறேன்!
வில்லியும் சாங்ரோவும் இரும்பு வலையை அகற்றும் பணியில் இரண்டு மணி நேரம் ஈடுபட்டனர்...
இறுதியில் இரும்பு வலை நகர்ந்தது!
இளவரசியை குறிபார்த்த படி துப்பாக்கியுடன் நிற்கும் இவனுடன் மோத வாய்ப்பே இல்லை...


இளவரசி மயங்கிக் கிடப்பது போல் நடித்துக் கொண்டிருக்கிறாள்., இதைவிடப் பெரிய அடியெல்லாம் சமாளித்திருக்கிறாள்! என் திட்டத்தை அரங்கேற்றுவது தான் ஒரே வழி என்பதைப் புரிந்து விட்டாள்!
வில்லி தண்ணீருக்குள் இறங்கினார்...
பெரிய குகைதான்! சந்தேகமில்லை... தண்ணீர் இரு வழிகளிலும் ஓடுகிறது!
அப்படியானால் இது உன்னை நிச்சயம் அகழிக்குக் கொண்டு போய்விடும்.. சீக்கிரம் வந்து எங்கள் எல்லாரையும் வெளியே கூட்டிப் போ. அப்பாவிப் பெண் மிஸ் பிளைசிக்கு மருத்துவ உதவி தேவைப் படுவதால் சீக்கிரமாகச் செயல்படு!
வில்லி மூச்சை 'தம்' பிடித்துக் கொண்டு தண்ணீரினுள் மறைந்தார்...
அற்புதமான பயல்! இனி நாம் இருவரும் இந்தப் பெண்ணைக் கொலை செய்யும் வழியைப் பார்ப்போம்!
அவளைக் கொல்லப் போகிறீர்களா? இப்பொழுதேவா?
யெஸ் மிஸ்டர் சாங்ரோ!



துப்பாக்கியை கார்வினுக்காக நிறுத்தி வைப்போம். அவன் வந்து ரகசிய அறையைத் திறந்ததும் சுட்டுத்தள்ளி விடுவோம்!
மிஸ் பிளைசியின் கணக்கை முடிக்க தோட்டா தேவை இல்லை என்றே நான் நிச்சயமாகக் கருதுகிறேன்!
...அவளுடைய சுவாசக் குழாயை லேசாக அழுத்திப் பிடித்தாலே பரலோகம் போய் விடுவாள்!
நீ சொல்வதும் சரிதான் பிரையர்...!
அவள் மயக்கமடைந்த நிலையில் கிடப்பது தான் வருத்தமாக இருக்கிறது! அவளைத் துடி துடிக்க கொன்ற திருப்தி உனக்குக் கிடைக்காதுதான்! ஆனால் என்ன செய்வது- கிடைப்பதை வைத்து சந்தோஷப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான்!
ம்ம்ம்... கிட்டே வா!
அவன் நெருங்கிய மறுகணம் வில்லி விட்டுச் சென்ற கத்தியை எடுத்து கண்ணிமைக்கும் நேரத்தில் சாங்ரோவின் கழுத்தில் சொருகினாள்... அவன் சப்தமின்றிக் கீழே பிணமாகச் சாய்ந்தான்!


ஓசையின்றி கொலை செய்வதில் நீ கில்லாடி மிஸ்டர் சாங்ரோ! நான் தலையிட வில்லையே எனக் குழம்புகிறாயா?
...இந்த துவாரத்தைக் காவல் காப்பதை விட்டு நான் அங்கே வந்தால் மீண்டும் இதே வழியாக கார்வின் வரக்கூடுமல்லவா?... ஆனால் இந்நேரத்திற்கு நீண்ட தூரம் போயிருப்பான் என நினைக்கிறேன்..!
பிரையர் திரும்பினான்...
ஓ! மிஸ் மாடஸ்டி - சண்டாளி! அப்பாவி சாங்ரோவை என்ன செய்தாய்?
அச்சச்சோ! சாங்ரோவிற்கு மேலோக பதவி வாங்கிக் கொடுத்து விட்டாய்!... இதே விஷமத்தைத் தானே என்னிடமும் காட்டுவாய்?
அதற்கு முன்பு ஒரே யொரு தோட்டாவால் உன்னைக் கீழே சாய்த்து விட்டால் நான் மகிழ்ச்சி அடைவேன்... இப்போது அந்த வேலையை முடிப்போம்!




அதே நேரம் தண்ணீர் குழாயிலிருந்து மேலே வந்த வில்லி அங்கு கிடந்த நீண்ட வாளை எடுத்தார்...
பிரையர்!
வில்லியின் சப்தம் கேட்டு திடுக்கிட்டுத் திரும்பினான் பிரையர்-
கார்வின்!
மாடஸ்டி முன்னே பாய்ந்து துப்பாக்கி ஏந்திய அவனது கரத்தைப் பற்றினாள்...
தோட்டா எங்கோ பறந்தது - ஆனால் வில்லி வீசி எறிந்த வாள் பிரையர் மார்பில் பாய்ந்தது
ஆ ஆ ஆ!
இளவரசி உனக்கு ஒன்று மில்லையே?
நான் எதிர்பார்த்ததை விட நன்றாக இருக்கிறேன் வில்லி..!


நீ எடுத்து வீசுவதற் கென்றே அங்கு ஒரு வாள் இருக்கும் என எப்படி அறிந்தாய்?
வாள் இருந்திருக்கா விட்டால் கழியையோ- ஏன் அந்த இரும்பு வலையையோ வீசியெறிந் திருப்பேன்!
நீ சாங்ரோவை மடக்கி விடுவாய் என்ற எதிர் பார்ப்பில் தான் இந்த விவகாரத்தையே துவக்கி வைத்தேன்!
அவன் வேலையை எளிதாக்கி விட்டான்... என்னைக் கழுத்தை நெறித்துக் கொல்ல அருகில் வந்தான்!
அமைதியாக இரு இளவரசி - காயமடைந்த இடத்திலிருந்து மீண்டும் ரத்தம் கசியத் துவங்குகிறது!
இவ்வளவு நேரம் எப்படித் தாக்குப் பிடித்தீர்கள் வில்லி?
அவர்களை ஏமாற்றினேன்... குகையில் தண்ணீர் அவ்வளவு ஆழமாக இல்லை. தண்ணீருக்கும் மேல் சுவற்றுக்கு மிடையே ஒரு சில அங்குல இடைவெளி யிருந்தது. எனவே கொஞ்ச நேரத்திற்கு ஒரு முறை வெளியே மண்டையை நீட்டி சுவாசித்தேன். கீழே குழாயினுள் பிரையர் லைட் அடிப்பதை நிறுத்தும் வரை காத்திருந்தேன்...!



அதன் பிறகு - அதிகாலையில் வில்லி கார்வின் நிஜமாகவே நீந்திச் சென்று -
...கோட்டையைச் சுற்றியுள்ள அகழியினை வந்து சேர்ந்தார்...
ஆ... எல்லாம் அமைதியாக உள்ளது!
10 நிமிடங்களுக்குப் பின்னர், அருகில் விட்டுச் சென்ற காருடன் வில்லி மீண்டும் கோட்டையினுள் நுழைந்தார்...
அந்தக் காயத்துடன் இளவரசி நீண்ட தூரம் நடந்து வருவதை நான் விரும்பவில்லை...
ரகசிய அறையிலோ மாடஸ்டி இருளில் காத்திருந்தாள். விளக்கு வெளிச்சமும் மங்கியது...
ரகசிய அறையை திறக்க உதவும் மெகானிசம் செயல்படாவிட்டால் நானும் தண்ணீர் குகை வழியாகத் தான் வெளி யேற வேண்டும்...
ஆனால் - பெரிய சப்தத்துடன் ரகசிய அறையை மூடியிருந்த சுவர் மேலே ஏறியது
ஆ! வேலை செய்கிறது இளவரசி!
யெஸ்... நம் அதிர்ஷ்டம் தான்!


நாம் ஓர் அறையில் பூட்டி வைத்திருந்த பிரையரின் ஆட்கள் எப்படி?
நான் வரும் போது அந்த அறையை பார்த்தேன்... சாங்ரோ சொன்னது போல் அவர்கள் கதவை உடைத்துக் கொண்டு வெளியேறி ஓடிப் போய் விட்டனர்!
நம்முடைய நண்பர்கள் இளவரசி... அதுதான் பிரையரையும் சாங்ரோவையும் என்ன செய்வது?
ஓ.கே! பணத்தை எடுத்துக் கொண்டு புறப்படுவோம்! 5 லட்சத்தில் ஒன்றைக் கூட இங்கு விட்டு விட வேண்டாம்!
யார் அவர்கள்? அவர்களைப் பற்றி நான் கேள்விப் பட்டதே கிடையாதே வில்லி..! ரகசிய அறையின் கதவை மூடி சீல் வைத்து விடுவோம். அதன் பிறகு நாம் வீட்டுக்குப் போவோம்!
மூன்று வாரம் வெளிநாடு பயணத்தை முடித்துக் கொண்டு மாடஸ்டி திரும்பியிருந்தாள்... அவளைச் சந்திக்க இன்ஸ்பெக்டர் புருக் வந்தார்..
ராபின் ஹூட் விழாவில் நீங்கள் இருவரும் கலந்து கொண்டதாக உள்ளூர் பத்திரிகையில் படத்துடன் செய்தி உள்ளது- உங்களுடன் பிரையர் என்ற ஆசாமியும் இருக்கிறான்?


...அவன் பயங்கரமான கிரிமினல்! உன்னுடைய நண்பன் பென் டர்னரை சித்ரவதை செய்து கொன்றது அவனாகத் தானிருக்கும்!
ஓ.. அது எனக்குத் தெரியாமல் போய் விட்டதே! ஆனால் ஸ்டூட்லியில் இருந்த போது எனக்கு அஜீரணம்!
..எனவே அங்கிருநது மருத்துவ சிகிச்சைக் காக நேராக சுவிட்சர்லாந்துக்குப் போனேன்!
ஆமாம் - ஆமாம் - அஜீரணம் பொல்லாத வியாதி!
விநோதம்தான்!... நீ சுவிட்சர்லாந்திலிருந்து இப்போதுதான் திரும்பியுள்ளாய். அங்கு கடந்த வாரத்தில்தான் போதை மருந்துக்கு அடிமையானவர்களுக்கு உதவ ஒரு டிரஸ்ட் அமைக்கப்பட்டுள்ளது - அதன் பெயர் டர்னர் டிரஸ்ட்!
உச் உச் உச்
நீயும் பிரையரும் வங்கியில் கொள்ளை யடிக்கப்பட்ட பணத்தை கைப்பற்றச் சென்றீர்கள் என நினைக்கிறேன். பணம் உனக்குக் கிடைத்துவிட்டது. அதை நீ பென்டர்னர் விரும்பியபடியே பயன்படுத்தி விட்டாய்! ஆனால் இதையெல்லாம் என்னால் ஒரு போதும் நிரூபிக்க முடியாது!




*பிரகாஷ் பப்ளிஷர்ஸ் சார்பாக லயன் காமிக்ஸ் மாத இதழை அச்சிடுபவரும் வெளியிடுபவரும், ஆசிரியரும் - S. விஜயன், முகவரி: பிரகாஷ் பப்ளிஷர்ஸ் தபால் பெட்டி எண்: 374, சிவகாசி -626 123. போன்: 20649*
*அச்சிட்டோர்: தி விஜய் புக்ஸ், சிவகாசி - 626 123.*


ஜூனியர் சீனியர்!
கதை S. விஜயன் ★ சித்திரம்: சிகாமணி
ஹலோ... யாரு அப்பாவா? நான்தான் கண்ணு பேசுறேன்...!
வேற ஒண்ணுமில்லை - வெளியே ஜோரா காத்து அடிக்குது! அதை சொல்லலாம்னுதான் போன் பண்ணினேன்!
அப்பப்போ யாரையாவது இப்படிக் கடுப்படிக்கிற துன்னா எனக்கு கொள்ளை பிரியம்!
பாவம் - ஆபீஸுக்குள்ளேயே இருந்து உங்களுக்கு போரடிக்குமில்லே? நான் ஜாலியா வெளியே போய் விளையாடப் போறேனே...! 'க்ளிக்'!



# வாசகர் கடிதம்



• சி. லலிதா, மேட்டூர் அணை-1.

அசத்திடுங்க, அசத்திடுங்க வரப்போகும் தீபாவளி இதழை! அட்டை படத்தை தூள் கிளப்பிடுங்க! வாழ்த்துக்கள்!

• S. மணிச்சந்திரன், வளவிச்செட்டிப்பட்டி.

''ஜெஸ்ஸி ஜேம்ஸ்'' அனைத்து விசையத்திலும் படு அட்டகாசமாய், அமர்க்களமாய் இருந்தது. கலரில் வந்த காமிக்ஸ்களிலேயே இது சுடராய் விளங்குகிறது.

• அ. முஹம்மது நிஜாமுத்தீன், நீடூர்.

எனது அபிமான ஹீரோ ரிப் கிர்பியின் கதை விரைவில் என்ற அறிவிப்பைக் கண்டு பேரானந்தம் அடைந்தேன். எப்போ? எப்போ? எப்போ?

• பாரதிநந்தீஸ்வரன், குமாரபாளையம்.

ஆசிரியர் விஜயனின் ஜுனியர் & சீனியர் சைக்காலஜிகலாக இருந்தது. சாதிக்கத் துடிக்கும் மனதையும் சோம்பேறிகள் கெடுத்து விடுவார்கள் என்பதை தமாஷாகவும், 'சிம்பாலிக்காகவும்' காட்டியது.

• L. வெங்கடேஸ்வரன், அய்யம்பாளையம்.

'ஸ்பாட் லைட்''-ல் வெளியான வாசகரின் படைப்பு மிகவும் நன்றாக இருந்தது. திறமைசாலிகளை ஊக்கப்படுத்தும் ஆசிரியருக்கு வாழ்த்துக்கள்!

• M. அருள், காட்டமன்னார்கோயில்.

கோஸ்ஸினியின் கதையில், மோரிஸின் சித்திரத்தில்,ஆசிரியர் விஜயனின் மொழிப் பெயர்ப்பில் ''ஜெஸ்ஸி ஜேம்ஸ்'' அட்டகாசமாக இருந்தது. அட்டைப் படம் சூப்பர்!

எல்லாவற்றிற்கும் மேலாக ''இரத்தப்படலம் - V'' ன் கலர் ட்ரெய்லர் என்னை மெய்மறக்கச் செய்துவிட்டது! முதலில் லயனுக்கு திருஷ்டி சுற்றிப் போடுங்கள் சார், கண் விழுந்துவிடப் போகின்றது

• து. பாலசுப்பிரமணியன், சிவகாசி.

'நடுக்கடல் நரகம்' படங்கள் 'பிரின்ஸ்' - கதை சித்திரங்கள் போல நன்கு இருந்தன. மொழிபெயர்ப்பு + சூழ்நிலைகள் தரமானது. ஆனால் Mr. பாலண்டைனின் கதைப் போக்கு விறுவிறுப்பாக இல்லை. மந்தமாக இருந்தது.

• M. ஆனந்த், சென்னை.

''நடுக்கடல் நரகம்'' மிகவும் Super என்று எல்லோரும் சொல்வதை போல் சொல்ல மாட்டேன். அட்டைப்படமும், ஜானியின் சாகஸமும் மட்டுமே Very Super.

• S. செல்வகுமார், கல்லுக்குழி.

ரிப்போர்டர் ஜானியின் நாலுக்கால் நண்பன் மிகவும் அருமை. நடுக்கடல் நரகம் ''சொல்வதற்கு'' ஒன்றுமில்லை ''சுமார்தான''.

• M. பூபதி, சென்னை-3.

''நடுக்கடல் நரகம்'' கதை பரவாயில்லை ரகம். ஆனால், படங்களே Very Super!.

• V. மூர்த்தி, தாம்பரம் - 45.

''நடுக்கடல் நகரம்'' படித்தேன். வித்தியாசமாக இருந்தது. அதிலும் ''ஜானி''யின் நாலுகால் நண்பன் அருமை.



## ஜெஸ்ஸி ஜேம்ஸ் இதழில் வெளியான

# க்ரைம் க்விஸ் - 13க்கு விடை

சற்றே சிரமமான இந்தப் போட்டிக்கு எக்கச்சக்கமான தவருன பதில்கள்! சரியான விடையெழுதியுள்ளது ஒரே ஒரு வாசகர் தான் என்றால் நம்ப முடிகிறதா என்ன? வெற்றிபெறும் வாசகர் :



D. புகழேந்தி,
32-A காந்தி நகர்,
செட்டியார்பட்டி (P.O)
ராஜபாளையம் - 626 122.



*இவருக்கு நமது லயன் டி-ஷர்டும், கீ-செயினும் பரிசாக அனுப்பப்படும்! **Congrats!***

## சரியான விடை :

ஸ்டெல்லா இன்ஸ்பெக்டர் கதவைத் தட்டும் வரை தூங்கிக் கொண்டிருந்ததாகக் கூறுகின்றாள். ஆனால் அவள் காதுகளில் மிகப் பெரிய பிளாஸ்டிக் கம்மல்கள் உள்ளன. இவ்வளவு பெரிய கம்மலை போட்டுக் கொண்டு யாரேனும் தூங்குவார்களா? அதனுல் அவள் பொய் சொல்வதாக டேஞ்சர் கண்டு பிடித்து விட்டார்.

## நடுக்கடல் நரகம் இதழில் வெளிவந்த

# க்ரைம் க்விஸ் - (14) விடை

இதற்குமே ஏராளமான wrong answers! எனினும் பரிசு பெறும் மூன்று வாசகர்கள்!

செ. சங்கர்,
1/8, அக்ரஹாரம்
பாணாம்பட்டு (P.O)
(Via) கோலியனூர்.

E. R. B. சற்குணர்,
3, 3rd க்ராஸ் தெரு,
கிருஷ்ண நகர், பம்மல்,
சென்னை - 75.

M. R. ராஜேந்திரன்,
85, ஹாஜியார் தெரு,
மீராபள்ளி தோட்டம்,
காரைக்கால் - 609 602.

மூவருக்கும் நமது லயன் டி-ஷர்ட் ப்ளஸ் கீ-செயின் அனுப்பப் படும்! வாழ்த்துக்கள். இனி...

## சரியான விடை :


எழுத்து மூலம் இருக்கும் ஆதாரம் போலி. கம்பெனி லெட்டர் ஹெட்டை மடிப்பின்படி மடித்தால் கவரினுள் வைக்க முடியாது. கவர் சிறியதாக உள்ளதே! கவரை விடப் பெரியதாக மடிக்கப்பட்ட தான் எப்படி கவரினுள் நுழையும்? அதனல் டேஞ்சர் கண்டு பிடித்து விட்டார்!

***இம்மாத க்ரைம்-க்விஸ் 16 க்கு விடையனுப்பக் கடைசித் தேதி :***

**15 - 11 - 94**

விடையனுப்பும்போது இந்தக் கூப்பன் கட்டாயம் தேவை!

க்ரைம் க்விஸ் - (16)
C/o. பிரகாஷ் பப்ளிஷர்ஸ்,
த. பெ. எண் : 374, சிவகாசி - 626 123.



# 105 அட்டைப்படங்கள் + 1 போட்டி = 3 சூப்பர் ப்ளோ-அப்!

வாசக நண்பர்களே,


இதோ ஒரு புதிய போட்டி! இதற்கான பரிசோ உங்கள் அனைவருக்குமே கிடைக்க வாய்ப்புள்ளது! நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான் :

இதுவரை வந்துள்ள நமது 105 லயன் இதழ்களையும் எடுத்துக் கொள்ளுங்கள்! அவற்றின் அட்டைப்படங்களை நிதானமாகப் பாருங்கள்! மிகப் 'பளிச்'சென்று இருக்கும் 3 அட்டைப்படங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றின் பெயரை ஒரு போஸ்ட்-கார்டில் எழுதியனுப்புங்கள்! majority ஓட்டுக்கள் வாங்கும் 3 டிசைன்களை முழு வண்ண ப்ளோ-அப்பாக 15" x 10" சைஸில் வரும் இதழ்களுடன் ஃப்ரீயாக வழங்கவிருக்கிறோம்!

15 - 11 - '94க்குள் உங்கள் செலக்ஷன்களை அனுப்பலாம்!

- ஆசிரியர்




ரோபோ ஆர்ச்சி!
குழந்தைகள் நல நிதி திரட்ட தாம்சனும், விக்டரும் தங்களுடைய ஈடிணையற்ற ஆற்றல் மிக்க ரோபோவோடு அமெரிக்காவில் ஒரு சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இருந்தனர். அப்போது சிகாகோ போலீஸாருக்கு ஆர்ச்சியின் பிரமிப்பூட்டும் செயல்திறனை வெளிப்படுத்தும் வகையில் சில சாகஸங்களை நிகழ்த்திக் காட்டினர்.
என் ஆட்களை பாடாத பாடு படுத்துகிறது... அந்த இரும்பு மனிதனை கட்டுப் படுத்தும் விசை உங்களிடம் இருக்கிறது என்பது தான் ஆறுதல் அளிக்கும் விஷயம்!
கவலைப்பட வேண்டாம் காப்டன்! ஆர்ச்சி எப்போதுமே நீதியின் கட்சிதான்!
ஆனால் சமூக விரோதக் கும்பலின் தலைவனான லூயிஸுக்கு புத்தி வேறு கோணத்தில் போனது..
அந்த மாதிரி ஆசாமி மட்டும் நம் வசம் இருந்தால் போலீஸ் மூஞ்சியில் கரியை பூசிவிடலாம்!
தோட்டா கூட பாயாது போலிருக்கே!
அந்த ஜோடி தங்கியிருக்கிற ஹோட்டலில் ஒரு வெயிட்டரை எனக்குத் தெரியும். ஐம்பது டாலர் கொடுத்தால் அவர்களுடைய பானத்தில் ஏதாவது ஒரு மயக்க மருந்தை கலந்து விட தயங்க மாட்டான்... நாம் அந்த ரோபோவை அபகரித்துக் கொண்டு விடலாம்!
அன்று மாலையில் -
இன்றைக்கு வேலை சக்கையாக பிழிந்து விட்டது.
ஆமாம்.. அடித்துப் போட்டது போல் தூக்கம் அருமையாக வரும்!
இரவு வரும் வரை காத்திருக்க வேண்டாம் ...டிகளா... இப்போதே நீங்கள் சுகமாக தூங்கலாம்!


அன்றைக்குப் போய் படுக்கையில் விழுந்ததுதான் தாமதம் ஆழ்ந்த நித்திரை அவர்களை ஆட்கொண்டது...
பயல்கள் இப்போதைக்கு எழுந்திருக்கப் போவதில்லை.
அந்த ரோபோவை கட்டுப் படுத்தும் டிரான்ஸ்மிட்டர்.. இதோ! ஆனால் இதில் எந்த பட்டனை அமுக்கினால் என்ன நடக்குமோ - தெரியவில்லையே!
பத்து நிமிடங்களுக்குப் பின் -
பாஸ்.. சாதித்து விட்டீர்கள்! நீங்கள் சொல்கிறபடியே செய்கிறது அந்த ரோபோ!
பின்புற வாசல் வழியாக வெளியேற்றி காரில் ஏற்றிக் காண்டு போய் விடுவோம்! இதன் செயல் திறனை சோதித்தறியும் வகையில் நம் ஹோட்டலில் வைத்து பரி சோதனை நடத்துவோம்!
மறுநாள் காலையில் தாம்சனும் விக்டரும் உசுப்பி எழுப்பப் பட்டனர்
ஹே.. ஏ..ஏன்.. என்ன ஆயிற்று?
உங்களுடைய ரோபோ இப்போது ஜாயில் என்னும் பிர பல ரௌடி வசம் இருக்கிறது.
அடக் கடவுளே.. டிரான்ஸ் மிட்டரையும் காணவில்லையே!
உங்களுக்கு தூக்க மருந்தை பானத்தில் கலந்து கொடுத்து, நீங்கள் அயர்ந்து தூங்கும் போது இங்கே வந்து ரோபோவை கிளப்பிக் கொண்டு போயிருக் கிறான் அந்தப் போக்கிரி - அந்த ரோபோவை வைத்து அவன் ஏதாவது விஷமம் செய்யுமுன் நாம் அதை மீட்டாக வேண்டும்.



ஆனால் எதிரிகள் படுவேகமாக செயல்பட்டுக் கொண்டிருந்தனர்.
ஐயோ.. ராட்சஸன்!
யாரும் அசையக் கூடாது..! ஆர்ச்சி.. போய் அந்த பெட்டகத்தை தூக்கி வா!
தன் வாடிக்கையான ஸ்டைலில் நேரடியாக உள்ளே நுழைந்தது ஆர்ச்சி
ஐ..யோ!
ஆர்ச்சி வருது... ஓரம் - ஓரம்!
தரையோடு உறுதியாக பிணைக்கப் பட்டு இருந்த பெட்டகத்தை அப்படியே அலாக்காக பிய்த்து எடுத்தது ஆர்ச்சி.
கொண்டு போய் வேனில் வை!
அங்கே தாம்சனும் விக்டரும் போலீஸாரோடு வந்தடைந்த போது எல்லாமே நடந்து முடிந்து விட்டிருந்தது.
இரு நூறாயிரம் டாலர்கள் பறி போய்விட்டன காப்டன். அவர்கள் மறைந்து வாழும் க்ரைஸ்டர் வளாகத்துக்கு தேடிப் போவோமா ஸார்?
நோ.. நம் படையில் பாதிப் பேரை இழந்து விடும் அபாயம் அதில் உண்டு!
இராணுவத்தினரிடம் அவர்கள் வசம் உள்ள மிகப் பெரிய பீரங்கியை அனுப்பி வைக்குமாறு கோரப் போகிறேன்... உங்களுடைய ரோபோவின் கதை ஓய்ந்து போவது நிச்சயம்... ஆனால், சிகாகோ நகரத்தை வெகு விரைவில் ஜுயில் வசப்படுத்திக் கொள்ளும் அசம்பாவிதத்தை தவிர்க்க வேறு வழியே கிடையாது இளைஞர்களே!


போலீஸார் ஆர்ச்சியை பீரங்கியால் தாக்கி அழிக்குமுன் நாம் முந்திக் கொண்டால்தான் உண்டு..
லூயிஸ் கும்பல் க்ரைஸ்டர் வளாகத்தில் இருப்பதாக போலீஸார் குறிப்பிட்டனர் அல்லவா.. நாம் உடனடியாக அங்கே போவோம்.. வா
அரை மணி நேரம் கழித்து - க்ரைஸ்டர் கட்டிடத்தின் பின்புற படிக்கட்டு வழியாக நைஸாக மேலே ஏறிச் சென்றார்கள் நண்பர்கள் இருவரும்..
காவலாளி யாரும் இல்லை..
ஆர்ச்சி தங்கள் வசம் இருக்கிற இறுமாப்பு காரணமாக இருக்கலாம்.. அதோ... உள்ளே இருக்கிறார்கள் பார்!
இன்றைய பொழுது நமக்கு நல்லபடியாக விடிந்திருக்கிறது.. இதே ரீதியில் போனால் நாம் ஒவ்வொருவரும் வெகு சீக்கிரமே மில்லியனராகி விடலாம்!
இந்த ரோபோவுக்குத்தான் நாம் நன்றி சொல்ல வேண்டும்..! பையா.. சுருட்டை பற்ற வை!
உத்தரவு மாஸ்டர்!
சண்டாளர்கள்.. ஆர்ச்சியை எடுபிடி ஆளாக்கி விட்டார்கள்!
முதலில் டிரான்ஸ்மிட்டரை கைப்பற்ற வேண்டும் விக்டர்... அதிரடியாக நாம் பாய வேண்டும்-ம்.. ஓடி வா!


மறுகணம் -
ஏய்ய்... என்..ன.. இது?
அந்த இரு பயல்கள் தான் - பிடியுங்கள்!
டிரான்ஸ்மிட்டரை கைப்பற்றி; தாம்சன் அவசரமாக அதை இயக்க முயன்ற போது -
நடக்காது.. தம்பி!
அஹ...
சமர்த்தர்கள் என்ற நினைப்போ...? வாருங்கள்.. வைகுண்டம் போக வழி காட்டுகிறேன்!
ஜூயில்ஸ் டிரான்ஸ்மிட்டரை இயக்கி தாம்சனையும், விக்டரையும் கைகளில் தூக்கிக் கொள்ளுமாறு ஆர்ச்சிக்கு ஆணையிட்டான்.
அப்படியே தூக்கிக் கொண்டு போய் ஜன்னல் வழியாக வெளியே போடு!
அது இப்போது என் கட்டுப்பாட்டில்! -நீங்கள் எவ்வளவு தான் கதறினால் அது உங்களை விடாது!
ஆர்ச்சி... வேண்டாம் - விட்டு விடு எங்களை!
பீதியடைந்த நண்பர்கள் தங்களை விடுவித்துக் கொள்ள முயன்று தோற்றுப் போனார்கள்.



செ..த்..தோ..ம்!
ஆனால் அவர்களுக்கு ஆயுள் கெட்டி போலும்.. அதிர்ஷ்ட வசமாக கட்டிடத்தை ஒட்டி இருந்த அலங்கார வளைவின் மீது போய் விழுந்தார்கள்..
ஆ..வ்வ்!
அம்மாடி!
நாம் இன்னமும் உயிரோடுதான் இருக்கிறோமா? என்னால் நம்பவே முடிய வில்லை!
நாம் தப்பித்துக் கொண்ட விஷயம் லூயிஸ் கூட்டத்தாருக்கு தெரியாது... இது நமக்கு சாதகமான அம்சம்.. கட்டிட முகப்பிற்குச் சென்று வேனில் ஏறி பதுங்கிக் காத்திருப்போம். எப்படியவாது அந்த டிரான்ஸ்மிட்டரை நாம் கைப்பற்றியாக வேண்டும்!
பத்து நிமிடங்களுக்குப் பின் அந்த கயவர் கும்பல் கட்டிடத்தை விட்டு வெளியே வந்தது.
இம்முறை நாம் பஸ்ட் நேஷனல் பேங்கில் நம் கைவரிசையை காட்டுவோம்! ஆர்ச்சி நம் கட்சியில் இருக்கையில் அந்தக் காரியத்தை மிகச் சுலபமாக சாதித்து விடலாம்!



ஆனால் சற்றுத் தொலைவில் --
லூயிஸ்... - போலீஸ்!
நில்லுங்கள்..! கைகளை உயர்த்திய வாறு எல்லோரும் கீழே இறங்கி வாருங்கள்.. இல்லையேல், பீரங்கி முழங்கும்.. கொத்துக்கறியாகிப் போவீர்கள்!
எக்கச்சக்கமாக மாட்டிக் கொண்டு விட்டோம்... சரணடைவதைத் தவிர வேறு வழியில்லை லூயிஸ்..
ஏனில்லை!... இப்போது பார்.. அந்த ரோபோவை அனுப்பி பீரங்கியை அவர்களுக்கு எதிராக திருப்ப வைக்கிறேன்!
வேனில் அங்கே வந்த நண்பர்கள் அந்த விபரீத சூழலை கண்டனர்.
விக்டர் வண்டியை உச்ச வேகத்தில் விடு... டிரான்ஸ் மிட்டரை உடனடியாக நாம் மீட்காவிடில் ஆர்ச்சியை ஒரே யடியாக இழந்து விடுவோம்!
டிரான்ஸ்மிட்டரால் தூண்டப்பட்ட ஆர்ச்சி காத்து நின்ற ஆபத்தை உணராமல் நேராக போலீஸ் படையை நோக்கி நடந்தது...
இதை அழிக்க எனக்கு இஷ்ட மில்லைதான்.. ஆனால் இதை இப்போது தீர்த்துக் கட்டா விட்டால் நம்பாடு ஆபத்தாகிவிடும்.. எனவே -
அதிர்ஷ்டம் அவர்கள் பங்கில் இருந்தது...
இந்த காட்சியை நான் கோட்டைவிட்டால் எல்லாமே நாசமாகிப் போய்விடும்..


டிரான்ஸ்மிட்டர் தரையை தொடப்போன தருணத்தில் இடையே புகுந்தது தாம்சனின் கை...
ஆர்ச்சி... அப்படியே எதிர்த்திசையில் திரும்பு.. காரில் இருக்கிற எதிரிகள் கும்பலை பிடி...
பீரங்கியை முழக்க தயாராகுங்கள்...
தன்னுடைய மாஸ்டரின் குரலைக் கேட்ட ஆர்ச்சி ஆணைக்கு அடி பணிந்தது...
ஆ..!
பீரங்கியை முழக்க வேண்டாம்! ரோபோ எதிரிகளை துவம்ஸம் பண்ணத் தொடங்கிவிட்டது!
உடும்புப் பிடியாக லூயிஸை தூக்கிக் கொண்டு வந்தது ஆர்ச்சி
அவனுக்கு இது வேண்டியதுதான் -விடாதே!
ஐயோ.. விடு என்னை!
சரியான தருணத்தில் வந்து சேர்ந்து விட்டீர்கள்,.. இன்னும் ஒரு வினாடி தாமதமாக வந்திருந்தாலும் உங்களுடைய அருமை ரோபோவை கூட்டி அள்ளி கூடையில் போட்டுக் கொண்டு போக வேண்டியிருக்கும்... லூயிஸை பிடித்து எங்களிடம் ஒப்படைத்த உங்களுக்கு நன்றி இளைஞர்களே!
மொத்! மொத்!
நன்றியை ஆர்ச்சிக்கு சொல்லுங்கள்.. ஹே.. ஆர்ச்சி இங்கே வாயேன்!
பொறுமையாய் இருங்கள்! ஒரு முக்கிய வேலையை முடித்து விட்டு வருகிறேன்!
அவசரம் இல்லை.. அதற்கு எவ்வளவு ஆத்திரமோ.. அது தீரும் மட்டும் நைய புடைத்து விட்டு வரட்டும் - காத்திருக்கிறேன்!
முற்றும்.

# கதை சொல்லும் படங்கள் - 4


**S. விஜயன்**

ஒரு காமிக்ஸ் தொடரை உருவாக்குவது எப்படி என்பது பற்றி இந்த மாதம் எழுதப் போகிறேன்...

முதலில் காமிக்ஸ்களில் மூன்று தினுசு உள்ளது என்பதை தெரிந்து கொள்ள வேண்டும்.

**• கார்டூன் படத் துணுக்கு :**

அதாவது மூன்றோ அல்லது நான்கு கட்டத்திற்குள் ஒரு சிறு நிகழ்ச்சியை ஹாஸ்யத்தோடு கலந்து சொல்லும் விதம் இது. நியூஸ் பேப்பர்களில் இது போன்ற கார்டூன்களை நிறையப் பார்க்கலாம். ஞாயிற்றுக்கிழமைப் பேப்பர்களில் வெளிவரும் கார்டூன்களுக்கு மட்டும் ஒரு முழுப்பக்கம் ஒதுக்கப்படும்.




கார்டூன் படத் துணுக்கு

**• சாகஸக் கதைத் தொடர் :**

டார்ஜான்; வேதாளன், மாடஸ்டி பிளைஸி போன்ற கதைகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம்! தினமும் மூன்றே மூன்று கட்டங்கள் மட்டும் கொண்டு ஒரு கதையை தொய்வில்லாமல் ஆறு மாதத்திற்கு வரை கொண்டு செல்ல வேண்டும்.




**• காமிக்ஸ் கதை :**

நமது லயன் காமிக்ஸ் போல - முழு நீளக் கதைகளை வெளியிடும்

பாணி! அமெரிக்காவில் காமிக்ஸ் இதழ் என்றாலே 32 பக்க பெரிய சைஸ் / கலர் அச்சு / 20 பக்கக் கதை - பாக்கி முழுவதும் விளம்பரம் என்ற பாணி! ஐரோப்பாவிலோ - மிகப் பெரிய சைஸில் - 48 பக்கத்தில் - மிக அருமை யான அச்சுத்தரத்துடன் காமிக்ஸ் வெளியிடுவது வழக்கம்! (என்றாவது ஒரு நாள் அந்த Standard ல் நாமும் வெளியிட வேண்டுமென்பது எனது அவா...!)

நீங்கள் ஒரு கார்டூன் துணுக்கை தயாரிக்க விரும்பினாலும் சரி - சாகஸத் தொடரை தயாரிக்க நினைத்தாலும் சரி - காமிக்ஸிற்கு முழு நீளக் கதை உருவாக்க திட்டமிட்டாலும் சரி - உங்களது முதல் தேவை கதை!

பொதுவாகவே உலகமெங்கும் காமிக்ஸ்களுக்கு கதையெழுவதும், படம் போடுவதும் ஒரே ஆளாக இருப்பது கிடையாது. கதை எழுதுபவர் இலண்டனில் இருக்கலாம் - சித்திரங்கள் ஆஸ்திரேலியாவில் கூட போடப் படலாம்.

புதியதொரு ஹீரோவை ஒரு காமிக்ஸ் கம்பெனியினர் உருவாக்க விரும்புகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். எடிட்டரும், அவரது உதவியாளர்களும் ஹீரோ எப்படி இருக்க வேண்டுமென்ற தங்கள் எதிர்பார்ப்புகளை கதை எழுதவிருப்பவரிடமும், ஆர்ட்டிஸ்டிடமும் கலந்து பேசுவார்கள். ஹீரோ வின் குணங்கள் - (சில சமயம் ஸ்பைடர் போன்ற 'நெகடிவ்' ஹீரோவாகவும் இருக்கலாம்) அவனது உருவ அமைப்பு - விசேஷ சக்திகள் போன்ற விபரங் களெல்லாம் கோடிட்டுக் காட்டப்படும். ஆர்ட்டிஸ்ட் சின்னச் சின்ன ஸ்கெட்ச் கள் போட்டுக் காட்டுவார். ஹீரோவைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்து விட்ட பிறகு கதாசிரியரிடம் கதையின் நீளத்தைப் பற்றி விபரம் சொல்லி விடுவார் எடிட்டர். 20 பக்கங்களுக்குள் சிலர் கதையை முடிக்க விரும்புவர், (BATMAN போல) சிலரோ 60 பக்கமாக்கி - மூன்று பாகங்களாகப் பிரித்துப் போட விரும்பலாம். அப்படிப்பட்ட சமயங்களில் ஒவ்வொரு பாகத்தின் இறுதி யிலும் ஏதாவது ஒரு சஸ்பென்ஸ் வைத்து - அடுத்த இதழை வாங்கச் செய்ய ஒரு ஆர்வத்தை உருவாக்க வேண்டியது அவசியம். (இரத்தப்படலம் - XIII போல)



கதாசிரியர் இந்த விபரங்களோடு கதை எழுதிக் கொண்டு வருவார். எடிட்டர் படித்துப் பார்த்து விட்டு 'ஓ.கே' சொல்லி விட்டால் கதையை சுத்தமாக 'டைப்' பண்ணி ஆர்ட்டிஸ்டிற்கு அனுப்பி விடுவார்கள். (டைப் பண்ணாமல் வரும் கதைகளை ஆர்ட்டிஸ்டுகள் திரும்பிக் கூட பார்ப்ப தில்லை - என்பதை கவனிக்கவும்)



கதையைக் கவனமாகப் படித்து விட்டு படம் போடத் தொடங்குவார் ஆர்ட்டிஸ்ட். படங்கள் போட்டு முடித்த பிறகு lettering பிரிவிற்கு அனுப்பப் படும். அங்கே கதையின் வசனங்கள் நுணுக்கமாக எழுதுப்பட்டு படங்கள் மீது ஒட்டப்படும். (படங்கள் போடும் டெக்னிக்; மற்றும் lettering பற்றி **அடுத்த** மாதங்களில் விரிவாக எழுதவிருக்கிறேன்.) இப்போது முடிக்கப்பட்ட பக்கங்களுக்கு வண்ணம் சேர்க்க colouring ஆர்ட்டிஸ்டிடம் ஒப்படைக்கப் படும். கதையின் தன்மைக்கு ஏற்றபடி வண்ணங்கள் சேர்க்கப்படும். XIII (இரத்தப் படலம்) போன்ற இறுக்கமான கதைகள் என்றால் கலர்களும் sober ஆக இருக்கும். அதே சமயம் லக்கி லூக் போன்ற கார்டூன் கதைகள் என்றால் அத்தனையும் 'பளிச்' கலர்களாக வரும்!

இத்தோடு ஆர்ட்டிஸ்டுகள் பணி முடிவடைந்து - அச்சுப் பிரிவிற்கு கதைகள் போகும்!

ஆக ஒரு காமிக்ஸ் கதையின் பின்னால் -

எடிட்டர் குழு → கதாசிரியர் → லைன் டிராயிங் ஆர்ட்டிஸ்ட் → lettering ஆர்ட்டிஸ்ட் → colouring ஆர்ட்டிஸ்ட்

என்று ஒரு பெரிய சங்கிலியே உள்ளது!

ஒரு காமிக்ஸ் தொடர் வெற்றியடைய வேண்டுமென்றால் இந்தச் சங்கிலி யின் அத்தனை இழைகளும் ஒன்றுக் கொன்று உறுதியாகப் பிணைந்து -இணைந்து செயல்பட்டாக வேண்டும். நம் நாட்டில் உருவாக்கப்படும் காமிக்ஸ்கள் (கபீஷ், இன்ஸ்பெக்டர் கருடா போன்றவை) பெரியளவில் வெற்றி பெறுவதில்லை என்றால் - அதன் அடிப்படைக் காரணமே இங்கு எல்லாமே one-man-show ஆக இருப்பதால்! வேலைகளைப் பிரித்துக் கொள்ளாமல் அத்தனையையும் ஒரே நபர் பார்ப்பதால் end result அயல் நாட்டு தரத்திற்கு ஈடாக இருப்பதில்லை! இந்த விஷயத்தில் பணப் பிரச்-சனையும் ஒரு காரணமாகின்றது.

இங்கே - நம் நாட்டில் நல்ல தரமான இங்கிலீஷ் காமிக்ஸ்களுக்குக் கூட ரூ. 20/- அல்லது ரூ. 25/-க்கு மேல் விலை கிடைத்திடுவது நடக்காத காரியம். ஆனால் ஐரோப்பாவில் நிலை என்ன தெரியுமா? - **இரத்தப் படலம், கேப். டன் பிரின்ஸ் போன்ற இதழ்கள் ரூ. 300/= விலையில் சர்வ சாதாரணமாக விற்பனையாகின்றன! இரத்தப் படலம் மட்டும் ஒவ்வொரு பாகத்திலும் சுமார் 2 1/2 லட்சம் பிரதிகள் விற்பனையாகி சாதனை படைத் துள்ளது.**

ரூ. 300/= விலை கொண்ட ஒரு இதழ் 2 1/2 லட்சம் பிரதி விற்பனையா கிறதென்றால் அந்தப் பதிப்பகத்தின் லாபம் எவ்வளவு இருக்கும்? என்று நீங்களே கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள்!

அத்தகைய வருவாய் ஈட்ட காமிக்ஸ்களுக்கு அயல்நாட்டில் சக்தி யிருப்பதால் - கதாசிரியர்களுக்கும், ஆர்ட்டிஸ்டுகளுக்கும் எக்கச்சக்கமான சம்பளம் கொடுக்க முடிகின்றது' அதற்கேற்ப அவர்களது படைப்புகளும் பிரமாதமாக வருகின்றன!

இங்கேயோ காமிக்ஸ் வரைவது மூலம் ஒரு ஆர்ட்டிஸ்ட் காலம் தள்ள முடியும் என்ற உத்தரவாதம் கிடையாது! So - நமது படைப்புகளும் sub-standard ஆக இருப்பதில் வியப்பேது?

வாசக நண்பர்களே - காமிக்ஸ் உலகினுள் படைப்பாளர்களாக காலடி வைக்க எண்ணும் முன் specialisation ன் மகிமையைப் புரிந்து கொள்ளுங் கள். நீங்கள் கதை எழுதுவதில் கெட்டிக்காரர் என்றால் உங்கள் முழு கவனத் தையும் அதன் மீது மட்டும் செலுத்துங்கள்! படம் போடுவதில் உங்கள் நண்பர் கில்லாடியென்றால் அவரது துணையை நாடுங்கள்! உங்கள் கூட்டு முயற்சி நிச்சயம் நன்றாக வரும்!

தொடரும் -

*அடுத்த இதழில்:* **காமிக்ஸிற்கு கதை தேர்ந்தெடுப்பது எப்படி?**



# சிரிப்பின் நிறம் சிவப்பு




ஓவியப் போட்டி!
நாங்க லயனுக்கு மாறிட்டோம்
by- G.Anand
கடுகு = கேப்டன் பிரின்ஸ் குழு
வாசக ஓவியர்- G.ஆனந்த் 2/94-தாசநாயக்கன் பட்டி சேலம்-Dt. 636201.

# "மாதம் ஒரு வாசகர்"



வாசகர் பெயர் : தி.ரமேஷ்குமார் வயது: 15

முகவரி : 1. மல்லி தெரு, (K.K.நகர்), சீனிவாசநகர்(P.O), பெருங்களத்தூர், சென்னை-63

கல்வித் தகுதி : பத்தாம் வகுப்பு.

பொழுது போக்குகள் : படம் வரைவது, பத்திரிகை படிப்பது, பூனைகள் வளர்ப்பு,

லயன் காமிக்ஸ் படிப்பது எத்தனை காலமாய்? : 86 முதல் அவ்வபோது, 91 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து.

லயன் காமிக்ஸ் அறிமுகமானது எப்படி? நண்பன் மூலமாக

நீங்கள் படிக்கும் இதர பத்திரிக்கைகள் என்ன? : கோகுலம், பூந்தளிர், TINKLE, கல்கண்டு,.....

இதுவரை வந்த லயன் காமிக்ஸ் கதைகளில் நீங்கள் மிகவும் ரசித்துப் படித்தது எந்தக் கதை? தீபாவளிமலர்-86ல் வெளிவந்த 'பனிபூதம்' கதை

உங்களைத் தவிர வேறு யாரும் வீட்டில் லயன் காமிக்ஸ் படிக்கிறார்களா? ஆம். (அப்பா, அண்ணன்)

படித்து முடித்த பின் இதழை என்ன செய்வீர்கள்? சேர்த்து வைக்கிறேன்.




வாசக ஓவியர் : C.சங்கர், 1/8 - அக்ரஹாரம்,
பாணைம்பட்டு - 605103.

சிரிப்பின் நிறம் - **சிவப்பு!**

கதை: வசனம்: சித்திரம் : செ. சங்கர், பாணாம்பட்டு.





லயன் காமிக்ஸ்
பிரின்ஸ் IN ஆப்பிரிக்கா!
துடி துடிப்பான த்ரில்லர்!
ரூ. 4/-

# புக்-மார்கெட்

## தேவை!

லக்கி லூக் & சிக்பில்
கதைகள் அத்தனையும்

**S. ஜெய் ஷங்கர்,**
L/137, T.N.H.B.,
திருவண்ணாமலை - 606 601

## விற்பனைக்கு

1. டிராகன் நகரம்
2. லயன் சூப்பர் ஸ்பெஷல் '87
3. சைத்தான் விஞ்ஞானி
4. புரட்சித் தீ
5. மரண ராகம்
6. மர்மக் கோவில்
7. சூப்பர் சர்க்கஸ்

## தேவை!

1. இரத்த முத்திரை
2. கத்தி முனையில் மாடஸ்டி
3. கானகத்தில் ஒரு கைதி
4. கோப்ரா தீவில் ஸ்பைடர்
5. புதிர் குகை

## தேவை!

1. காணாமல் போன கடல்
2. தங்க வேட்டை
3. மர்ம முகமூடி
4. எமனுடன் ஒரு யுத்தம்
5. பழி வாங்கும் பாவை

**S. செல்வகுமார்,**
தெண்குத்து புதுநகர்,
கல்லுக்குழி, வாணதிராயபுரம் (P.O)
பண்ருட்டி T.K. - 607 303.

## தொடர்பு கொள்க

**P. ஸ்டீபன் செபாஸ்டியன்,**
18, அண்ணாநகர், 6-வது தெரு,
திருவண்ணாமலை - 608 601.




இன்ஸ்பெக்டர் டேஞ்சரின்
க்ரைம் க்விஸ் - 16
இன்னும் எத்தனை நாளுக்கு இப்படியே இந்த ஆஸ்பத்திரியில் அடைந்து கிடக்கணும் இன்ஸ்பெக்டர்?
கோர்ட்டில் வந்து சாட்சி சொல்லும் வரை பிரதர்!
நீ அப்ருவராக மாறி விட்டதால் உன்னுடைய பழைய கும்பல் உன்னைத் தீர்த்துக் கட்டுவதற்காக ஏற்பாடு பண்ணியிருக்கிறது! அதனால் ரொம்ப ஜாக்கிரதையாக இருக்கிறோம்!
ஹ்ம்ம்... எல்லாம் அமைதியாகத்தானிருக்கும்!
குடல்புண் சிகிச்சைப் பிரிவு
நோயாளிகள் தான் நடமாடிக்கிட்டிருக்காங்க ஆல்பி!
ஆமா சார் - பார்வையாளர்கள் சாயந்திரம் 7 மணிக்குப் பிறகுதான் வர அனுமதிக்கப்படுவார்கள்
ஆல்பி... இந்த அழகு மன்மதனின் மாவுக்கட்டை லேசாகப் பிரி பார்க்கலாம்...! அண்ணே... அசைந்தால் தொலைச்சுப்பிடுவேன்!
அந்தத் துப்பாக்கியை மொள்ளமாய் கீழே போட்டுவிடுகிறீகளா?
ஆ...ஆனால் இன்ஸ்பெக்டர் - அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?
அதுதானே? இன்ஸ்பெக்டர் டேஞ்சர் எப்படிக் கண்டுபிடித்தார்?